# இலங்கையில் நெல்லிற்கான உத்தரவாத விலைத் திட்டமும், அதன் செயற்பாடும்.

ந. பேரின்பநாதன்

இலங்கை மக்களின் பிரதான உணவாக விளங்கும் நெல்லானது இந்நாட்டின் விவசாயப் பொருளாதாரத்தில் பெரும் பங்கை வகித்து வருகின்றது.[1] நெல் பயிரிடும் துறை, பாரிய துறையாக விரிவடைந்திருப்பதுடன் மட்டுமல்லாது, ஏனைய பல துறைகளுடனும் தொடர்புடைய தொன்றாகவும் உள்ளது. இலங்கையில் தற்போதிருக்கும் சனத்தொகைக்கும் எதிர்காலத்தில் அதிகரித்துச்செல்லும் சனத்தொகைக்கும் உணவினை வழங்கவும், வேலைவாய்ப்பினை அதிகரிப்பதன் மூலம் வேலையின்மைப் பிரச்சினையைக் குறைக்கவும், கிராமப்புற மக்களின் வருமானத்தினை அதிகரித்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கும், நாட்டில் கைத்தொழில் விருத்தியினை ஏற்படுத்தவும், அரிசி, கோதுமை மா போன்றவற்றின் இறக்குமதியைக் குறைத்துச் சென்மதி நிலுவையின் பாதக நிலையினைக் குறைக்கவும், மிருகங்களுக்கான உணவினை (வைக்கோல், தவிடு போன்றன) அதிகரிக்கவும் நெற்பயிரின் உற்பத்தி அதிகரிப்பு இன்றியமையாததாக உள்ளது. இத்தகைய முக்கியத்துவம் காரணமாக இலங்கையில் சுதந்திரத்தின் பின் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் நெல் உற்பத்தியினை அதிகரிப்பதற்குப் பல்வேறு நடவடிக்கைகள்மூலம் விவசாயிகளை ஊக்கப்படுத்தின. குடியேற்றத் திட்டங்கள்மூலம் காணி வழங்கல், விவசாயிகளுக்குக் குறுங்கால நீண்டகாலக் கடன்களை நிறுவன ரீதியான மூலாதாரங்கள் மூலம் வழங்கல், மானிய அடிப்படையில் குறைந்த விலையில் கிருமிநாசினி, களைகொல்லி, உரம் போன்றவற்றை வழங்குதல், இந்திரமயமாக்கலை ஊக்கப்படுத்துதல், இலவச ஆலோசனைகள் வழங்குதல் போன்ற நடவடிக்கைகள்மூலம் அரசாங்கம் நெல்லின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு முயன்று வந்துள்ளது.

உற்பத்தியை ஊக்குவிப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளில் முடிவுப் பொருட்களுக்கு வழங்கப்படும் விலையும் பிரதான இடம் பெறுகின்றது. இந்த வகையில், நெல்லுக்கான உத்தரவாதவிலைத் திட்டமும், விவசாயிகளுக்குத் தூண்டுதலை அளிக்கின்ற அத்தியாவசியமான வழியாக அமைகின்றது.[2] இலங்கையில் கிராமங்களில் உள்ள தரகர்களின் தலையீட்டினால் விவசாயிகள் தமது உற்பத்தியின் முழுப்பலனையும் அனுபவிப்பதில்லை. தரகர்கள் சிறு விவசாயிகளுக்கு அதிக வட்டிக்குக் கடன் கொடுக்கும் நிலையும், விவசாயிகளிடமிருந்து முடிவுப் பொருட்களை குறைந்த விலைக்குப் பெறும் நிலையும் காணப்பட்டது. உற்பத்தியின் முழுப் பலாபலனையும் பெறாதபோது விவசாயிக்கு உற்பத்தியில் ஈடுபடுவதற்கு ஆர்வம் ஏற்படமாட்டாது. விவசாயப்பண்ணையில் உற்பத்தி செய்யப்படும் மிகையினைப் பொது மக்களுக்கு ஒழுங்காகக் கிடைக்கக் கூடிய வகையில் அரிசி விநியோகத்

தினை நிச்சயப்படுத்தவும், சிறு விவசாயிகளின் பொருளாதார வாழ்வில் தரகர்களின் தலையீட்டினை நீக்கவும் 1948 ஆம் ஆண்டில் உத்தரவாதவிலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. எனவே இலங்கையில் உத்தரவாதவிலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஏறக்குறைய மூன்றரைத் தசாப்தங்கள் கடந்து விட்டன. இந்நிலையில் இத்திட்டத்தின் தோற்றம், அதன் நோக்கங்கள் காலத்துக்குக்காலம் இத்திட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள், திட்டத்தின் நோக்கங்கள் எவ்வளவு தூரம் நிறைவேறியுள்ளன என்பன போன்ற விடயங்களை ஆராய்வது பொருத்தமானதாகும்.

## உள்வாரியான கொள்வனவுத் திட்டம்

இரண்டாவது உலக மகாயுத்தம் நடைபெற்றபோது அமுலில் இருந்த உள்வாரியான கொள்வனவுத் திட்டத்தின் (Internal Purchasing Scheme) வழிப்பிறந்த திட்டமாகவே உத்தரவாதவிலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.[3] அரிசிக்கான விலை ஆதாரவுத் திட்டம் 1935 ஆம் ஆண்டில் சந்தைப்படுத்தும் திணைக்களத்தால் ஏற்படுத்தப்பட்ட போதும் அது திறமையாகச் செயற்படவில்லை. இரண்டாவது உலகயுத்த காலத்தின்போது கப்பல் போக்குவரத்தில் தடை ஏற்பட்டதால் உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதில் கடினநிலைகள் ஏற்பட்டன. இதன் காரணமாக அரிசி இறக்குமதியும் 1938 ஆம் ஆண்டில் 522, 451 தொன்களில் இருந்து 1947 ஆம் ஆண்டில் 111, 933 தொன்களாகக் குறைந்தது. நாட்டில் உணவுப் பொருட்களுக்குப் பற்றுக்குறை ஏற்பட உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க வேண்டி ஏற்பட்டது. அத்துடன் கிடைக்கின்ற உணவுப் பொருட்களை மக்களிடையே சமமாகப் பங்கிடவேண்டியும் இருந்தது. இதற்காக அரசாங்கம் பங்கீட்டு முறையினையும் ஆரம்பித்தது. பங்கீட்டு முறையின் ஆரம்பமும் பெருமளவு தொகையினர் வேலைக்கமர்த்தப்பட்டதன் காரணமாக மக்களின் கொள்வளவு சக்தி அதிகரித்ததனால் நிலவிய உயர்ந்த விலைகளும், விவசாயிகளுக்கு முன்னைய உற்பத்தி அளவைப் பராமரிக்க மட்டுமல்லாது, பல உள்ளூர் உணவுப் பொருட்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் உதவி செய்தது.[4] நெல் இறக்குமதியில் காணப்பட்ட குறைவு நெல்லின் உள்நாட்டு உற்பத்தி விரிவடைந்ததை எடுத்துக்காட்டுகிறது.

உற்பத்தி அதிகரிக்கும்போது சந்தைப்படுத்தல் வசதிகளும் சிறந்த முறையில் இருப்பின் அதிகரித்த உற்பத்தியின் நன்மைகளை விவசாயிகள் பூரணமாக அனுபவிக்க முடியும். இதற்காக அரசாங்கம் 1942 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் உள்வாரியான கொள்வனவுத் திட்டத்தினை ஆரம்பித்தது. தொடக்க காலத்தில் அரசாங்கம் உள்ளூர் உற்பத்தியாளர்களின் சுயவிருப்பத்தின் அடிப்படையில், இத்திட்டத்தின்கீழ் ஒரு புசல் நெல் 2ரூபா 50 சதம் என்ற விலையில் கொள்வனவு செய்தது. பின்னர் நெல் உற்பத்தியாளர்கள் அனைவரும் தமது நுகர்வுத் தேவைக்கு மிஞ்சிய நெல்லை அரசாங்கத்திற்கு உள்வாரியான கொள்வனவுத் திட்டத்தின்கீழ் வழங்குமாறு கட்டாயப்படுத்தப்பட்டனர்.[5] இத்திட்டத்தின்கீழான கொள்வனவை ஊக்குவிப்பதற்காக விலையானது அடிக்கடி அதிகரிக்கப்பட்டது. உள்வாரியான கொள்வனவுத்திட்ட விலையானது 1943 ஆம் ஆண்டின் ஆரம்ப காலத்தில் புசலுக்கு 2ரூபா 50சதம் என்ற நிலையில் இருந்து படிப்படியாக 3ரூபா

50சதம் என அதிகரிக்கப்பட்டு, அவ்வாண்டு முடிவதற்கிடையில் 6ரூபாவாக உயர்த்தப்பட்டது. உள்வாரியான கொள்வனவுத் திட்டத்திற்கும், தற்போது நடைமுறையில் உள்ள உத்தரவாதவிலைத் திட்டத்திற்கும் இடையே பல ஒற்றுமைகள் காணப்படுவதால்தான் உத்தரவாதவிலைத் திட்டத்தினை, உள்வாரியான கொள்வனவுத் திட்டத்தின் வழிப்பிறந்த திட்டம் எனக்கூறப்படுகின்றது.

## உத்தரவாதவிலைத் திட்டத்தின் தோற்றமும் நோக்கங்களும்

இரண்டாவது உலகயுத்தம் முடிவடைந்து. 1948 ஆம் ஆண்டில் இலங்கை சுதந்திரம் பெற்றதும் உள்நாட்டு நெல் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்பதிற் பலரும் அக்கறை காட்டினர். உற்பத்தி அதிகரிப்புக்கு விலைமூலமான ஊக்கம் அவசியமானதாகும். விலைக் கொள்கையானது. விவசாயிக்கு நியாயமானதும் போதுமானதுமான வருமானத்தினைக் கொடுக்கவேண்டும் என்ற நோக்கத்தினை மட்டும் கொண்டிராது உற்பத்தியை அதிகரிப்பதற்கான தூண்டுதல்களையும் உள்ளடக்கி இயல்பாகவே உருவாக வேண்டும்.[6] உணவு உற்பத்தி அதிகரிப்பில் ஈடுபாடு கொண்ட அமைச்சர்கள், நிரந்தர காரியதரிசிகள் துணைத் தலைவர்கள் அடங்கிய குழுவொன்றினால் சில உணவுப் பொருட்களின் உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கப்பட வேண்டும் என்றும், அத்தகைய பொருட்களின் உற்பத்திக்கு ஊக்கமளிப்பதற்கு உத்தரவாத விலைகள் நிர்ணயிக்கப்படவேண்டும் என்லும் தீர்மானிக்கப்பட்டது.[7] இதன் காரணமாக 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இலங்கையில் உத்தரவாதவிலைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

உற்பத்தியை அதிகரிப்பதே உத்தரவாதவிலைத் திட்டத்தின் பிரதான நோக்கமாக இருப்பினும், விவசாயிகளின் வருமானத்தினை உயர்த்தும் நோக்கமும் முக்கியமாகக் காணப்பட்டது. உத்தரவாதவிலைத் திட்டம் தனியே சிறு விவசாயிகளுக்கு நியாயமான விலையினை வழங்கவேண்டும் என்பதை உறுதிப்படுத்துவதை மட்டுமல்லாமல், அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவிலிருந்து அவனைப் பாதுகாக்கும் வழிவகையென்ற முறையிலும் நோக்கப்படல் வேண்டும் என்ற கருத்து 1952 ஆம் ஆண்டளவில் எழுந்தது.[8] பிற்காலத்தில் உத்தரவாதவிலைத் திட்டத்தின் நோக்கம் விரிவாக்கப்பட்டு சிறு விவசாயிகளின் பல்வேறுன விளைபொருட்களும் அத்திட்டத்தில் அடக்கப்படும்வரை ஆரம்பத்தில் அத்திட்டம் நெற்பயிரில் மாத்திரமே கவனத்தினைச் செலுத்தியது.[9] படிப்படியாகச் சோளம், மிளகாய், பச்சைப் பயறு, புளி, மிளகு, வெங்காயம், பருப்பு, எள், குரக்கன், இஞ்சி, நிலக்கடலை, கோப்பி விதை போன்ற பல்வேறு விளைபொருட்களும் இத்திட்டத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்டன: வரண்ட வலயத்தில் சேனைப் பயிர்ச்செய்கைமூலம் உற்பத்தி செய்யப்படும் குரக்கன், சோளம் போன்றவற்றிற்கும் உத்தரவாத விலை விதித்தமை சிறுவிவசாயிகளின் வருமானத்தினை அதிகரிக்கவேண்டும் என்ற நோக்கத்தினையே பிரதிபலிக்கின்றது.

சந்தைப்படுத்தும் திணைக்களத்தின் ஆணையாளரால் உத்தரவாதவிலைத் திட்டத்தின் நோக்கங்கள் பின்வருமாறு இருக்கும் என்று கூறப்பட்டது.[10]

1) உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலை கிடைப்பதையும், உற்பத்திப் பொருட்களுக்கு உடனடிச் சந்தை கிடைப்பதையும் உறுதிப்படுத்தல்.

2) இதன்மூலம் நாட்டில் உணவுப் பொருட்களின் உற்பத்திக்கு ஊக்கமளித்தல்.

3) நீண்ட காலத்தில் சுயதேவையினைப் பூர்த்திசெய்தல் என்பதை நோக்கமாகக் கொண்டு இறக்குமதிகளை உள்ளூர் உற்பத்திமூலம் பிரதியீடு செய்தல்.

மேற்கூறிய நோக்கங்களை அடிப்படையாக வைத்து உத்தரவாதவிலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது ஒரு புசல் நெல்லுக்கான உத்தரவாத விலை 8 ரூபா என நிர்ணயம் செய்யப்பட்டது.

## உத்தரவாத விலையினை நிர்ணயித்தல்

ஒரு பொருளுக்கான உத்தரவாத விலையினை நிர்ணயிக்கின்றபோது பொருளின் உற்பத்திச் செலவு, உள்நாட்டில் குறிப்பிட்ட பொருளுக்குக் காணப்படும் கேள்விநிரம்பல் ஆகியவற்றினால் சந்தையில் நிர்ணயிக்கப்படும் விலை, இறக்குமதி விலை போன்றவற்றினையும் கவனத்திற் கொள்ளவேண்டி உள்ளது. உத்தரவாத விலையானது உற்பத்திச் செலவுக்கு மேற்பட்டதாக இருக்கவேண்டுமென்பதில் எவ்வித மாறுபட்ட கருத்தும் இருக்க முடியாது. குறிப்பிட்ட பொருளின் உற்பத்தியில் ஈடுபடுகின்றபோது, குறைந்தது அதற்கேற்பட்ட செலவையாவது பெற்றுக்கொள்ளலாம் என்ற நம்பிக்கையிருப்பின்தான் விவசாயிக்கு அப்பொருளினை உற்பத்தி செய்வதற்கான அடிப்படை ஆர்வமே ஏற்படும். உத்தரவாத விலையின் நோக்கம் பொருளின் உற்பத்திச் செலவை மாத்திரம் பெற்றுக்கொடுப்பதல்ல. விவசாயிகளுக்கு நியாயமான இலாபத்தினை வழங்குவதன்மூலம் உற்பத்தியில் ஆர்வத்தினைத் தூண்டுவதாகவும் இருக்கவேண்டும். அந்நிலையில்தான் உத்தரவாத விலை ஊக்கமளிக்கும் விலையாகத் தொழிற்பட முடியும். நீண்ட காலத்தில் குறிப்பிட்ட பொருளில் தன்னிறைவை அடையவேண்டும் என்ற நோக்கமும் உள்ளடக்கப்படுகின்றபோது உத்தரவாத விலையானது நவீன தொழில் நுட்பங்களை உற்பத்தியிற் புகுத்துவதன்மூலம் ஏற்படும் அதிகரித்த உற்பத்தியின் காரணமாக விலையில் ஏற்படக்கூடிய வீழ்ச்சியினைப்பற்றிக் கவலைப்படாமல் தொடர்ந்து உற்பத்தியில் ஈடுபடக்கூடிய ஊக்கத்தினை அளிக்கக்கூடியதாக அமைதல்வேண்டும். அதாவது உற்பத்திச் செலவைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பதுடன் முடியுமானால் போதியளவு இலாபத்தினையும் வழங்கி நவீன தொழில்நுட்பங்களை உற்பத்தியிற் புகுத்தக்கூடிய தூண்டுதல்களை வழங்கக்கூடிய வகையில் உத்தரவாத விலை நிர்ணயிக்கப்பட்டால் அத்திட்டம் தனது நோக்கங்களை நிறைவேற்றக்கூடியதாக இருக்கும்.

உள்நாட்டுச் சந்தையிற் சுதந்திரமான முறையில் நெல்லுக்கான கேள்வி, நிரம்பல் சக்திகள் இயங்குவதன்மூலம் நிர்ணயிக்கப்படும் சமநிலை விலைக்கு மேலாக உத்தரவாத விலை அமைதல் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கமளிப்பதாக இருக்கும். முடிவுப் பொருட்களுக்கு உடனடிச் சந்தை வாய்ப்பினை வழங்குதல் என்ற உத்தரவாதவிலைத் திட்டத்தின் நோக்கம் திறமையாக நிறைவேற்றப்பட வேண்டுமாயின் திறந்த சந்தை விலையைவிட உத்

தரவாதவிலை உயர்வாக இருக்கவேண்டும். அவ்வாறில்லையாயின் விவசாயிகள் தமது பொருட்களை உத்தரவாத விலைக்கு விற்காது வேறுவழிகள் மூலமே சந்தைப்படுத்த முயல்வர். இந்நிலையில் உத்தரவாதவிலைத் திட்டத்தின் நோக்கமும், விவசாயிகளின் நடவடிக்கையும் முரண்பட நேரிடும். திறந்த சந்தைவிலையினைவிட உத்தரவாதவிலை உயர்வாக இருக்கும்போது, தமது விளைபொருட்களுக்கு நல்ல விலையினைப் பெறலாம் என்ற நம்பிக்கை உறுதியாக விவசாயிகளிடம் காணப்படும். அந்நம்பிக்கை உற்பத்தியை அதிகரிப்பதற்குத் தூண்டுதல் அளிப்பதாக இருக்கும். திறந்த சந்தை விலையைவிட உத்தரவாதவிலை குறைவாக இருக்கின்றபோது கீழ்மட்ட விலையாகத் தொழிற்படுவதாகவே இருக்குமேயன்றிப் பெருமளவுக்கு உற்சாகத்தினை வழங்குவதாக அமையமாட்டாது.

உத்தரவாதவிலையினை நிர்ணயிக்கின்றபோது, இறக்குமதி விலையினையும் கவனத்திற் கொள்ளவேண்டி உள்ளது. இலங்கையில் 1966 ஆம் ஆண்டு வரை நெல்லின் உற்பத்திச் செலவுகள்பற்றி அறிவதற்கான தகவல்கள் பெறப்படவில்லை. அதாவது உத்தரவாதவிலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஏறக்குறைய இரு தசாப்தங்கள்வரை உள்நாட்டில் நெல்லின் உற்பத்திச் செலவுபற்றிய தகவல்கள் கிடைக்கவில்லை. நாட்டின் நெல் உற்பத்திச் செலவுகள்பற்றிய தகவல்கள் கிடைக்காத நிலையில் அரிசியின் இறக்குமதி விலையே உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு உத்தரவாதமளிக்கப்படும் குறியீட்டு மட்டமாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமெனக் கருதப்பட்டது.[11] உற்பத்தி செய்யும் நாட்டில் நெல்லின் உற்பத்திச் செலவில் மாற்றமில்லாமல் இருப்பினும், சர்வதேச சந்தையில் ஏற்படக்கூடிய கேள்வி நிரம்பல் மாற்றங்களால் அரிசியின் விலைமட்டம் மாறுபடும் என்பதும் இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கது. உள்ளூர் உற்பத்தியாளர்களின் நலனை நோக்கமாகக்கொண்டு பார்க்கும்போது உத்தரவாதவிலை இறக்குமதி விலையினை விடக் கூடுதலாக இருக்கவேண்டுமெனக் கூறப்படுகிறது. வெளிநாட்டில் இருந்து நெல் இறக்குமதி செய்யப்படும்போது இறக்குமதி விலை உத்தரவாத விலையைவிடக் கூடுதலானதாக இருப்பின் அந்நிலை நமது நாட்டின் அரசாங்கம் வெளிநாட்டு விவசாயிகளுக்குத் தூண்டுதல் வழங்கி அவர்களை ஊக்குவிப்பதாகக் கருத முடியும். இத்தகைய நோக்கில் இறக்குமதி விலையை விட உத்தரவாத விலை உயர்வாக இருக்கவேண்டி உள்ளது. எனவே சுருக்கமாக நோக்கில் உத்தரவாத விலையானது, உற்பத்திச் செலவு, திறந்த சந்தை விலை, இறக்குமதி விலை ஆகியவற்றினைக் கவனத்திற்கொண்டு நிர்ணயிக்கப்படுகின்றபோது, அதன் நோக்கங்களைத் திறமையாகவும் சுலபமாகவும் அடையக்கூடிய சூழ்நிலை உருவாகும் எனலாம்.

இலங்கை அரசாங்கம் விலையினை நிர்ணயம் செய்கின்றபோது, அரசாங்கத்தின் உணவுப் பங்கீட்டு முறை, நெல் கொள்வனவு செய்வதற்குக் கையாளும் முறை போன்றனவும் முக்கிய பங்கெடுத்துக் கொண்டுள்ளன. இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கையின் அடிப்படையில் அடிக்கடி உத்தரவாத விலையின் அளவினை அதிகரித்துக்கொண்டுவந்துள்ளது.

பின்வரும் அட்டவணையானது இலங்கையில் ஒரு புசல் நெல்லிற்கான உத்தரவாத விலையினைக் காட்டிநிற்கிறது.

### அட்டவணை 1

புசலொன்றிற்கான நெல்லின் உத்தரவாத விலை (1948 – 1983)

| காலம் | | விலை (ரூபாவில்) |
|---|---|---|
| 1948 பெப்ரவரி தொடக்கம் | 1951 யூலை வரை | 8 – 00 |
| 1951 ஒகஸ்ட் ,, | 1952 ஒகஸ்ட் வரை | 9 – 00 |
| 1952 செப்டம்பர் ,, | 1967 ஒக்டோபர் வரை | 12 – 00 |
| 1967 நவம்பர் ,, | 1972 ,, ,, | 14 – 00 |
| 1972 ,, ,, | 1973 – 9 – 30 வரை | 18 – 00 |
| 1973 நவம்பர் 1 ,, | 1974 – 3 – 29 ,, | 25 – 00 |
| 1974 – 3 – 30 ,, | 1974 – 7 – 10 ,, | 30 – 00 |
| 1974 – 7 – 11 ,, | 1977 – 11 – 15 ,, | 33 – 00 |
| 1977 - 11 – 16 ,, | 1980 – 11 – 6 ,, | 40 – 00 |
| 1980 – 11 –6 ,, | 1981 – 1 – 29 ,, | 50 – 00 |
| 1981 – 1 – 30 ,, | 1981 - 11 – 21 ,, | 52 – 50 |
| 1981 – 11 – 22 ,, | 1983 பெப்ரவரி ,, | 57 – 50 |
| 1983 மார்ச் ,, | | 62 – 50 |

மூலம்: நெற்சந்தைப்படுத்தும் சபை

அட்டவணையினை மேலோட்டமாக நோக்குகின்றபோது, ஆரம்ப உத்தரவாத விலையில் அதிக மாற்றங்கள் இல்லாதிருப்பதையும், பிற்காலத்தில் குறிப்பாக 1973 ஆம் ஆண்டின் பின்னர் அடிக்கடி உத்தரவாத விலையில் மாற்றங்கள் செய்யப்பட்டிருப்பதையும் காணலாம். உத்தரவாத விலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து ஏறக்குறைய 25 ஆண்டுகள் வரை உத்தரவாத விலை 10 ரூபாவால் மட்டுமே அதிகரிக்கப்பட்டிருந்தது. அடுத்த பத்து வருடங்களுக்கு உத்தரவாத விலையில் ஏற்பட்ட அதிகரிப்பு (62 . 50 – 18 . 00) 44 ரூபா 50 சதமாகும். மிகக் குறுகிய காலத்தில் உத்தரவாத விலையில் பெரும் அதிகரிப்பு ஏற்பட்ட காலம் 1973 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திற்கும் 1974 யூலை மாதத்திற்கும் இடைப்பட்ட காலத்திலாகும். அதாவது 10 மாதத்திற்குள் 15 ரூபா அதிகரிப்பு ஏற்படுத்தப்பட்டது. இவ்வாறு இவ்வாண்டுகளில் உத்தரவாத விலை அதிகரிக்கப்பட்டதற்குக் காரணம் இறக்குமதி செய்யப்படும் உரத்தினால் ஏற்பட்ட உயர்ந்த செலவும், உலக சந்தையில் உணவுத் தானியங்களின் விலை அதிகரித்தமையுமாகும்.[12]

மத்திய வங்கியும் உத்தரவாத விலையினை உயர்த்துமாறு இடையிடை தனது கருத்தினைத் தெரிவித்தும் இருந்தது. 1979 ஆம் ஆண்டு மத்தியவங்கி அறிக்கையில் உத்தரவாத விலையை உயர்த்துமாறு தெரிவித்த கருத்துக்கள் கவனத்திற்குரியன. ''.. ...... கடந்த இரண்டு ஆண்டு காலத்தில் நெல்லின்

உற்பத்திச் செலவு மிகவும் உயர்ந்துவிட்டதன் காரணமாக உற்பத்தியாளரின் இலாப எல்லைகளும், கணிசமானளவு குறைந்துள்ளன. அத்துடன் நெற் செய்கைக்குக் கொடுக்கும் கடன் வழங்குவதற்கான சட்டதிட்டங்களும் இறுக்கமாக்கப்பட்டுள்ளன. மேலும் விவசாயிகளும் வாழ்க்கைச் செலவில் உயர்ச்சி நிலையினை எதிர்நோக்கி உள்ளனர். உற்பத்தியாளரின் இலாப எல்லையில் ஏற்படும் வீழ்ச்சி கமக்காரரிடம் மீண்டும் முதலீடு செய்வதற்குள்ள மூலவளங்களையும், அத்துடன் அவர்கள் வாழ்க்கைத் தரத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஏற்றப்பாடுகளையும் குறைக்கிறது. எனவே முதன்மையான இத்துறையில் உற்பத்திக்கான உந்துதல்களை அடைவதற்கு நெல்லின் உத்தரவாத விலையினை மேல்நோக்கித் திருத்துவதற்குக் கூடிய கவனம் செலுத்துதல் வேண்டும்."[13] பிற்காலத்தில் குறிப்பாக 1977 ஆம் ஆண்டின் பின்னர் இலங்கையில் காணப்பட்ட பணவீக்கப் போக்கு. இறக்குமதி அரிசி விலை உயர்வு என்பன உத்தரவாத விலையினை அடிக்கடி உயர்த்தவேண்டி இருந்தமைக்கு முக்கிய காரணமெனில் மிகையாகாது. இதனை விட 1967 ஆம் ஆண்டுக்குப் பின்னர் உத்தரவாத விலைக்கும் திறந்த சந்தை விலைக்கும் இடையே பெருமளவு இடைவெளி காணப்பட்டமையும் உத்தரவாத விலையை உயர்த்தக் காரணமாயிற்று. அரசாங்கம் கிராமிய மக்களின் வருமானத்தினை அதிகரிப்பதில் அக்கறை காட்டியமை, நெல்லில் சுயநிறைவினை விரைவாக அடைய முனைந்தமை போன்றனவும் உத்தரவாத விலையினை அதிகரிப்பதற்குப் பிற்காலத்தில் பெரிதும் பொறுப்பாக இருந்தன.

## உற்பத்திச் செலவும், உத்தரவாத விலையும்

உத்தரவாத விலைத் திட்டமானது விவசாயிகளை உற்சாகப்படுத்த வேண்டுமாயின் ஒரு புசல் நெல்லுக்கு வழங்கப்படும் உத்தரவாதவிலை உற்பத்திச் செலவு முழுவதையும் பெற்றுக் கொடுக்கக்கூடியதாக இருப்பதுடன் நியாயமான இலாபத்தினையும் வழங்கக்கூடியதாக இருக்கவேண்டும். உற்பத்திச் செலவு மாற்றத்திற்கேற்ப, உத்தரவாத விலையும் மாற்றப்பட வேண்டும். உற்பத்திச் செலவானது தொடர்ந்து அதிகரித்துக் கொண்டு செல்லுமாயின் ஒன்றில் இத்திட்டத்தின் நோக்கம் தோற்கடிக்கப்படும் அல்லது விலைகளை மேல்நோக்கிச் சரிப்படுத்த வேண்டி ஏற்பட, திறமையற்ற விவசாயிகளுக்கு மானியம் வழங்குவதன் மூலம் அரசாங்க வரவு செலவுத்திட்டத்தில் பெரும் சுமை உருவாகும்.[14] எனவே சரியான முறையில் உற்பத்திச் செலவினைக் கண்டறிந்து அதற்கேற்ப உத்தரவாத விலையினையும் சரிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

அண்மைக் காலம்வரை இலங்கையில் நெல்லின் உற்பத்திச் செலவுகள் பற்றிய கணிப்பீடுகள் செய்யப்படாமலேயே இருந்தன. முதன்முதலில் இலங்கையில் நெல் உற்பத்திக்கான செலவை அறிவதற்காக 1966 ஆம் ஆண்டில் இலங்கை மத்திய வங்கி ஆய்வொன்றை நடத்தியது. பின்னர் கமநல ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனம் விவசாயத் திணைக்களம் போன்றவற்றாலும் நெல்லிற்கான உற்பத்திச் செலவுகள் கணிப்பிடப்பட்டுள்ளன.[15] இக்கணிப்பீடுகளில் சில தவறுகள் காணப்படினும் நெல்லிற்கான உற்பத்திச் செலவை அறிவதற்கு அவையே நமக்குக் கிடைக்கக்கூடிய

தரவுகளாகக் காணப்படுவதால் அவற்றின் அடிப்படையிலேயே உத்தர வாதவிலைத் திட்டம் விவசாயிகளுக்கு விலைமூலம் ஊக்கமளிப்பதாக உள்ளதா, இல்லையா என்பதை ஓரளவு மதிப்பிட்டுக்கொள்ள முடியும். பின் வரும் அட்டவணை 2 சில குறிப்பிட்ட மாவட்டங்களில் ஒரு புசல் நெல் லிற்கான உற்பத்திச் செலவைக் காட்டி நிற்கின்றது.

### அட்டவணை 2

**ஒரு புசல் நெல்லிற்கான உற்பத்திச் செலவும் உத்தரவாத விலையும்**
**(ரூபாவில்)**

| மாவட்டம் | 1966/67 பெரும் போகம் | 1972 சிறு போகம் | 1972/73 பெரும் போகம் | 1976/77 பெரும் போகம் | 1982/83 பெரும் போகம் | 1983 சிறு போகம் |
|---|---|---|---|---|---|---|
| அம்பாந்தோட்டை | 8.21 | 14.43 | 8.48 | 23.00 | 42.14 | 52.72 |
| பொலநறுவை | 9.84 | 9.67 | 8.85 | 24.39 | 40.15 | 39.78 |
| குருநாகல் | 11.97 | 12.64 | 11.49 | — | 51.13 | 36 09 |
| கண்டி | 16.81 | 9.80 | 11.03 | 25.44 | 59.36 | 45.61 |
| கொழும்பு | 23.96 | 11.68 | 15.15 | 29.75 | 50.85 | 73.74 |
| உத்தரவாத விலை | 14.00 | 14.00 | 18.00 | 33.00 | 57.50 | 62.50 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி,
கமநல ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனம்,
விவசாயத் திணைக்களம்,
நெற்சந்தைப்படுத்தும் சபை.

அட்டவணை 2 இனை நோக்குகின்றபோது சில மாவட்டங்களில் உற் பத்திச் செலவானது சில காலங்களில் உத்தரவாத விலையைவிடக் கூடுதலாக இருந்துள்ளதைக் காணலாம். 1981 ஆம் ஆண்டின் பின்னர் பேராதனையி லுள்ள விவசாயத் திணைக்களம் இலங்கையின் சகல மாவட்டங்களிலும் நெல் உற்பத்திக்கான செலவைக் கணிப்பிட்டுவருகின்றது. (பின்னிணைப்பு 1 ஐப் பார்க்கவும்) இத்திணைக்களத்தினுல் 1983 ஆம் ஆண்டு சிறுபோக நெற்செய்கைக்கான கணிப்பீட்டின்படி கொழும்பு (73 ரூபா 74 சதம்), களுத்துறை (65 ரூபா 75 சதம்), மாத்தறை(66ரூபா 90 சதம்), இரத்தினபுரி (74 ரூபா 73 சதம்) போன்ற மாவட்டங்களில் உத்தரவாத விலையினைவிட உற்பத்திச் செலவு கூடுதலாகஇருந்துள்ளது. எனினும் திறந்த சந்தைவிலை உற்பத்திச் செலவினைவிடக் கூடுதலாக இருந்துள்ளதால் உத்தரவாதவிலை குறைவாக இருப்பினும் விவசாயிகள் அம்மாவட்டங்களில் தொடர்ந்து நெல்லை உற்பத்தி செய்துவருகின்றனர். மேலும் மாவட்டத்திற்கு மாவட்டம் உற்பத்திச் செலவுகள் வேறுபட்டுக் காணப்படுகின்றன, இதற்குப் பல காரணங்கள் பொறுப்பாக உள்ளன. விவசாயிகளின் திறமையின்மையும் உற்பத்திச் செலவை அதிகரிப்பதற்குக் காரணமாக அமையும் என்பதும்

கவனத்திற்குரியது. ஏனெனில் திறமையின்மையின் காரணமாக ஏற்படும் உற்பத்திச்செலவதிகரிப்பில் இருந்து விவசாயிகளை மீட்பதற்கு உத்தரவாத விலையினை அதிகரிப்பது என்பது உற்பத்திச் சாதனங்களை விரயப்படுத்துவதற்கு ஊக்கமளிப்பதைக் குறிக்கும். மழையை நம்பிப் பயிரிடும் இடங்களில் நெல்லுக்கு ஏற்படும் உற்பத்திச் செலவு, நீர்ப்பாசன வசதியுள்ள இடங்களில் நெல்லுக்கு ஏற்படும் உற்பத்திச் செலவிலும்பார்க்க அதிகமாக உள்ளது.[16] இவ்வேறுபாட்டினை மாவட்டத்திற்குள்ளேயே அறிய முடியும். உதாரணமாக இரத்தினபுரியை எடுத்துக்கொள்வோம். 1983 ஆம் ஆண்டு சிறுபோக நெற்செய்கை பொறுத்து இம்மாவட்டத்திற்குள் மழையை நம்பிப் பயிரிடும் இடத்தில் ஒரு புசல் நெல்லிற்கேற்பட்ட உற்பத்திச் செலவு 74 ரூபா 73 சதமாகும். நீர்ப்பாசன வசதியுள்ள இடத்தில் ஒரு புசல் நெல்லுக்கு ஏற்பட்ட உற்பத்திச் செலவு 43 ரூபா 88 சதமாகும். இந்நிலையினை கண்டி மாத்தளை, மாத்தறை, குருநாகல், கம்பகா போன்ற மாவட்டங்களிலும் காணக்கூடியதாக உள்ளது. நீர்ப்பாசன வசதியினை அதிகரிக்கின்றபோது நெல்லிற்கான உற்பத்திச் செலவைக் குறைத்துக் கொள்ளலாம் என்பது இங்கு வெளிப்படுகின்ற தெளிவான உண்மையாகும். எவ்வாறாயினும் உற்பத்திச் செலவு சில மாவட்டங்களில் கூடுதலாக இருப்பதற்கான உண்மைக் காரணிகளை ஆராய்ந்து விவசாயிகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் உத்தரவாத விலையை நிர்ணயிப்பது அரசாங்கத்தின் கடமையாகும். இல்லாவிடில் உத்தரவாதவிலைத் திட்டத்தின் நோக்கங்கள் தோல்வியடையலாம்.

சில மாவட்டங்களில் உற்பத்திச் செலவு உத்தரவாத விலையைவிட மிகக் குறைவாகக் காணப்பட்டுள்ளது. உதாரணமாக 1983 ஆம் ஆண்டு சிறுபோகத்தினை எடுத்துக் கொண்டால் உத்தரவாதவிலை 62 ரூபா 50 சதமாக இருந்தபோது, பொலநறுவை, கேகாலை ஆகிய மாவட்டங்களில் உற்பத்திச் செலவு முறையே 39 ரூபா 78 சதம், 36 ரூபா 89 சதமாக இருந்தன. இத்தகைய மாவட்டங்களில் உத்தரவாத விலை, ஊக்கம் கொடுக்கும் விலையாக இருந்தது. செலவு உத்தரவாத விலையை விடக் கூடுதலாக இருக்கும்போது அது ஊக்கமளிப்பதாக இருக்காது. ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தினை எடுத்துக்கொண்டால் சில காலங்களில் அம்மாவட்டத்தில் நெல் உற்பத்திச் செலவு உத்தரவாதவிலையை விடக் கூடுதலாகவும், சில காலங்களில் குறைவாகவும் இருந்துள்ளது. இதனால் உற்பத்திச் செலவு உத்தரவாதவிலை என்பவற்றின் ஒப்பீட்டு அடிப்படையில் நெல்லுக்கான உத்தரவாதவிலை தூண்டுதல் அளிக்கும் விலையாக இருக்கின்றதா என்ற தெளிவான முடிவுக்கு வருவது மிகக்கடினமாக உள்ளது.[17]

## உத்தரவாத விலையும் திறந்த சந்தைவிலையும்

திறந்தசந்தைவிலையினைவிட உத்தரவாதவிலை ஓரளவு உயர்வாக இருக்கின்றபோதே அது உற்பத்தியாளருக்குக் கவர்ச்சிகரமாக விளங்க முடியும். திறந்தசந்தைவிலையினைவிட உத்தரவாதவிலை குறைவாக இருக்கின்றபோது அது கீழ்மட்ட விலையாகவே இயங்கும். இலங்கையில் உத்தரவாதவிலை இருவகையிலும் பங்காற்றி உள்ளது. பின்வரும் அட்டவணை 3 ஒரு புசல் நெல்லுக்கான வெளிச்சந்தை விலையினையும், உத்தரவாத விலையினையும் காட்டிநிற்கின்றது.

## அட்டவணை 3

### ஒரு புசல் நெல்லுக்கான வெளிச்சந்தை விலையும், உத்தரவாத விலையும் 1954 – 1983

| ஆண்டு | வெளிச்சந்தைவிலை (ரூபாவில்) | உத்தரவாத விலை (ரூபாவில்) | உத்தரவாத விலையின் பங்கு |
|---|---|---|---|
| 1954 — 66 | 10.59 — 11.64 | 12.00 | ஆதரவு விலை |
| 1967 | 13.66 | 14.00 | ஆதரவு விலை |
| 1968 — 72 | 14.55 — 15.33 | 14.00 | கீழ்மட்ட விலை |
| 1973 | 16.69 | 18.00 — 30.00 | ஆதரவு விலை |
| 1974 | 45.56 | 33.00 | கீழ்மட்ட விலை |
| 1975 | 41.84 | 33.00 | கீழ்மட்ட விலை |
| 1976 | 37.30 | 33.00 | கீழ்மட்ட விலை |
| 1977 | 28.00 — 30.00 | 33.00 – 40.00 | ஆதரவு விலை |
| 1978 | 40.80 | 40.00 | கீழ்மட்ட விலை |
| 1979 | 42.88 | 40.00 | கீழ்மட்ட விலை |
| 1980 | 46.00 — 58.00 | 40.00 — 50.00 | கீழ்மட்ட விலை |
| 1981 | 64.00 — 74.00 | 50.00 — 57.50 | கீழ்மட்ட விலை |
| 1982 | 72.00 | 57.50 | கீழ்மட்ட விலை |
| 1983 | 71.00 — 79.00 | 57.50 — 62.50 | கீழ்மட்ட விலை |

மூலம்: குடிமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்தியவங்கி

ஆரம்ப காலங்களில் குறிப்பாக 1967 ஆம் ஆண்டுக்கு முன்னர் உத்தரவாதவிலை வெளிச்சந்தைவிலையை விடக் கூடுதலாகவும், 1967 க்குப் பின் ஓரிரு ஆண்டுகள் தவிர்ந்த ஏனைய பெரும்பாலான ஆண்டுகளில் உத்தரவாத விலை திறந்தசந்தைவிலையை விடக் குறைவாகவும் அமைந்திருப்பதை அட்டவணை 3 இலிருந்து அறிய முடிகிறது.

திறந்தசந்தைவிலை சுதந்திரமான முறையில் நிர்ணயிக்கப்பட வேண்டுமாயின் நெல்லுக்கான கேள்வி நிரம்பல் சக்திகள் எவ்வித தடையுமின்றித் தொழிற்படுதல் வேண்டும். ஆனால் அண்மைக்காலம்வரை இலங்கையில் திறந்த சந்தைவிலை நுகர்வோர் மானியம், அரிசிப்பங்கீட்டு முறை போன்றவற்றின் காரணமாக இயல்பான முறையில் நிர்ணயிக்கப்படவில்லை. இதனால் செயற்கை முறையடிப்படையில் அமைந்த மட்டுப்படுத்தப்பட்ட விலையே காணப்பட்டது. உணவுப் பங்கீட்டு முறைக்கும் வெளிச்சந்தையில் அரிசியின் விலைக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உண்டு. பங்கீட்டு முறையில் வழங்கப்படும் அரிசியின் அளவு குறையக்குறைய மக்கள் வெளிச்சந்தைவிலையில் அரிசி கொள்வனவு செய்ய முனைவர். இதனால் வெளிச்சந்தையில் அரிசியின் கேள்வி அதிகரிக்க, விலை உயர்வதை நடைமுறை அனுபவங்கள் காட்டிநிற்கின்றன. 1966 ஆம் ஆண்டு மார்கழி மாதத்தில் அரிசிப் பங்கீடானது தலா 25 சதப்படி தலைக்கு இரண்டு

கொத்து அரிசி வழங்கிய நிலையில் ஒரு கொத்து அரிசி மாத்திரம் இலவசமாக வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்வாறாக அரிசிப் பங்கீட்டில் ஏற்பட்ட குறைப்பும் நெல்லுக்கான உத்தரவாத விலை புசலொன்றிற்கு 12 ரூபாவாக இருந்த நிலையில் இருந்து 14 ரூபாவாக அதிகரித்தமையும் வெளிச்சந்தையில் அரிசியின் விலை பெருமளவுக்கு உயர்வதற்கு வழியாயிற்று.[18] 1973 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் இலவச அரிசியினை கூப்பனுக்கு அரைக் கொத்தாக மாற்றியபோது மீண்டும் அரிசியின் விலை வெளிச்சந்தையில் பெருமளவுக்கு உயர்ந்ததை அட்டவணையில் இருந்து அறிந்துகொள்ளலாம். 1973 யூலை மாதத்தில் ஏற்படுத்தப்பட்ட புதிய ஒழுங்கு விதிகள் அனுமதி இல்லாமல் ஓரிடத்தில் இருந்து இன்னோரிடத்திற்கு அரிசி கொண்டு செல்வது தடைசெய்யப்பட்டது. அனுமதியில்லாமல் அரிசியினைக் கொண்டுசெல்ல முடியாமல் இருந்தகால் வெளிச்சந்தையில் அரிசியின் விலை அதிகரித்தது.[19] 1974 ஆம், 1975 ஆம் ஆண்டுகளில் வெளிச்சந்தை விலையின் துரிதமான அதிகரிப்புக்கு இதுவே முக்கிய காரணமாகும். இவ்வொழுங்கு விதிகள் 1975 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் நீக்கப்பட்டபின் விலைகள் குறைவடைந்தன. 1979 ஆம் ஆண்டில் உணவு முத்திரைத் திட்டம், அறிமுகப்படுத்தப்பட்டதுடனும், உயர்ந்த வருமானமுடையோரிடமிருந்து அரிசிப் பங்கீட்டுமுறை மீளப்பெறப்பட்டதுடனும் அரிசிக்கான திறந்தசந்தை கணிசமான அளவு அதிகரிக்கப் படிப்படியாக அரிசியின் விலை அதிகரித்து திறந்த சந்தைவிலைக்கும் உத்தரவாத விலைக்கும் இடையேயான இடைவெளி விரிவடைந்து சென்றது:

திறந்தசந்தைவிலையும் உத்தரவாத விலையும் ஒன்றையொன்று மேல் நோக்கிச் செலுத்துவதற்கு உறுதுணையாக விளங்கியுள்ளன, என்ற கருத்தும் நிலவுகின்றது. திறந்த சந்தை விலையின் அதிகரிப்பு காலப்போக்கில் உத்தரவாதவிலையில் உயர்ச்சியினை ஏற்படுத்துவதற்குத் தூண்டுகோலாக இருந்துள்ளது என்பதை மறுக்க முடியாது. திறந்தசந்தை விலையின் உயர்வால் நெல் கொள்வனவு பாதிக்கப்படுவதை அறிந்த உத்தரவாதவிலைக்குப் பொறுப்பாக உள்ள நெல்சந்தைப்படுத்தும் சபை, தனது நெல் கொள்வனவை அதிகரிப்பதற்காக உத்தரவாதவிலையை அதிகரித்தும் உள்ளது. மேலும் பிற்காலத்தில் அவசியமானால் கேள்விப்பத்திரத் திட்டத்தின் கீழ் நெற்சந்தைப்படுத்தும் சபைகூட உத்தரவாதவிலையினை விடக் கூடுதலான விலை வழங்கிக் கொள்வனவு செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டது.[23] இந்நடவடிக்கைகள் வெளிச்சந்தைவிலைகள் உயர்வதற்கு வழிவகுத்தன.

வெளிச்சந்தை விலைகள் பெருமளவுக்கு உயராதவண்ணம் தடுத்து, நுகர்வோரைப் பாதுகாப்பதிலும் நெற்சந்தைப்படுத்தும் சபை செயலாற்றி உள்ளது. ஒவ்வொரு ஆண்டின் இறுதிக்காலப்பகுதிகளில் வெளிச்சந்தை விலைகள் முற்பகுதியில் இருந்ததைவிட உயர்வது வழக்கம். உதாரணமாக 1980 ஆம், 1981 ஆம், 1983 ஆம் ஆண்டுகளின் முன்னரைப் பகுதிகளில் ஒரு புசல் நெல்லின் விலை 46 /–, 64 /–, 71 /– என முறையே அமைந்திருக்க பின்னரைக்காலப் பகுதிகளில் அவ்விலைகள் முறையே 58 /–, 74/–, 79/– என அமைந்திருந்தன. சிறுபோக விளைச்சல் வருட இறுதியில் குன்றும் போது வெளிச்சந்தை விலைகளின் அதிகரிப்புக் கூடுதலாக இருக்கும். எனவே

ஒவ்வொரு ஆண்டினதும் பிற்காலப் பகுதிகளில் உத்தரவாத விலைக்கும், வெளிச்சந்தை விலைக்கும் இடையேயுள்ள வேறுபாடு முன்னரைப் பகுதியில் உள்ளதைவிடக் கூடுதலாக இருக்கும். இத்தகைய விலை உயர்வு பெருமளவு ஏற்படுவதைத் தடுப்பதற்காக நெல் சந்தைப்படுத்தும் சபை ஆண்டின் முற்பகுதியில் கொள்வனவு செய்துவந்த நெல்லை, ஆண்டின் பிற்பகுதியில் சந்தைக்கு விடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளது. விலை உயர்வதைத் தடுத்து நுகர்வோரைப் பாதுகாக்கவேண்டுமென்பதே இதற்கான முக்கிய காரணமாகும்.

சுருங்கக்கூறின் 1966 ஆம் ஆண்டுக்கு முன் பெரும்பாலான காலங்களில் வெளிச்சந்தைவிலையினைவிட உத்தரவாத விலை உயர்வாக இருந்ததன்மூலம் உற்பத்தியாளருக்கு ஆதரவு தரும் விலையாக விளங்கியது. 1967 ஆம் ஆண்டுக்குப் பின்னர் உள்ள காலங்களில் ஓரிரு ஆண்டுகளைத் தவிர ஏனைய ஆண்டுகளில் உத்தரவாத விலையிலும்பார்க்க வெளிச்சந்தை விலை கூடுதலாக இருந்ததால் விவசாயிகளை ஈர்க்கின்ற விலையாகத் தொழிற்படவில்லை. எனினும் இதன் பங்கினைக் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. உத்தரவாதவிலைத் திட்டம் திருப்திகரமான முறையில் இயங்காவிட்டாலும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட அரிசியின் விலை சந்தையில் கணிசமான அளவு உயர்வதற்குத் துணையாக இருந்தது.[22] இது விவசாயிகளுக்கு ஊக்கம் கொடுப்பதாக இருந்தது. உத்தரவாதவிலைத் திட்டம் நடைமுறையில் இருந்தமை மிகையேற்பட்ட காலப் பகுதிகளிலும்கூட கடுமையான விலைமந்தநிலை ஏற்படாது என்ற உண்மையினை உறுதிப்படுத்தியது.[23] இந்நிலை உற்பத்தியாளர்கள் உயர்ந்த தொழில் நுட்பத்தினை உபயோகப்படுத்தி உற்பத்தியினை அதிகரிப்பதற்குத் தூண்டுதல் அளிப்பதாக இருக்கும். 1967 ஆம் ஆண்டுக்குப் பின்பு பெரும்பாலும் உத்தரவாத விலையானது குறிப்பிட்ட அளவுக்குக்கீழ் இறங்காது என்ற நம்பிக்கையினை அளித்து விவசாயிகளைப் பாதுகாக்கும் கீழ்மட்ட விலையாக இயங்கிவந்துள்ளதெனலாம்.

## இறக்குமதி விலையும் உத்தரவாத விலையும்

இறக்குமதி செய்யப்படும் நெல்லின் விலையிலும்பார்க்கஉத்தரவாதவிலை உயர்வாக இருப்பது உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் செயலாக இருக்கும் என ஏற்கனவே நோக்கியுள்ளோம். இறக்குமதி செய்யப்படும் நெல்லின் விலை உலக சந்தையில் பல்வேறு காரணிகளால் நிர்ணயிக்கப் படுகின்றது. இலங்கையில் இறக்குமதி செய்யப்பட்ட நெல்லின் விலை உலக சந்தைவிலை, நாணயமாற்று வீதம் போன்றவற்றினால் தீர்மானிக்கப் படுகின்றது. அட்டவணை 1 இனையும் அட்டவணை 4 இனையும் ஒப்பிட்டு நோக்குகின்றபோது 1948 ஆம் ஆண்டுக்கும் 1983 ஆம் ஆண்டுக்கும் இடையில் உத்தரவாத விலை, இறக்குமதி விலை ஆகியவற்றின் நிலை இவ்வாறு அமைந்துள்ளது என்பதைக் காணலாம். அட்டவணை 4 ஒரு புசல் இறக்குமதி செய்யப்பட்ட நெல்லுக்கான விலை இலங்கையில் எவ்வளவாக இருந்துள்ளது என்பதைக் காட்டிநிற்கிறது.

## அட்டவணை 4

### இறக்குமதி செய்யப்பட்ட நெல்லின் விலை
(புசலொன்றுக்கு ரூபா விலையில்)

| ஆண்டு | விலை | ஆண்டு | விலை | ஆண்டு | விலை |
|---|---|---|---|---|---|
| 1948 | 7.88 | 1960 | 6.57 | 1972 | 7.95 |
| 1949 | 7.79 | 1961 | 6.43 | 1973 | 13.70 |
| 1950 | 7.74 | 1962 | 6.75 | 1974 | 38.63 |
| 1951 | 8.15 | 1963 | 7.00 | 1975 | 30.79 |
| 1952 | 11.24 | 1964 | 7.30 | 1976 | 24.85 |
| 1953 | 10.95 | 1965 | 7.48 | 1977 | 26.43 |
| 1654 | 9.40 | 1966 | 7.68 | 1978 | 54.57 |
| 1955 | 7.99 | 1967 | 9.36 | 1979 | 61.51 |
| 1956 | 7.45 | 1968 | 14.65 | 1980 | 66.17 |
| 1957 | 6.78 | 1969 | 11.85 | 1981 | 89.96 |
| 1958 | 6.84 | 1970 | 9.80 | 1982 | 74.73 |
| 1959 | 6.72 | 1971 | 8.22 | 1983 | 71.79 |

மூலம் : உணவு ஆணையாளர்

முதலாம் நான்காம் அட்டவணைகளை ஒப்பிட்டு நோக்குகின்றபோது 1977 ஆம் ஆண்டுக்கு முன்னர் உள்ளஆண்டுகளில் 1968 ஆம், 1974 ஆம் ஆண்டுகளில் மாத்திரமே உத்தரவாதவிலையைவிட இறக்குமதி விலை கூடுதலாக இருந்துள்ளது. 1967 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இலங்கை 20 வீதத்தினால் நாணயப் பெறுமதி இறக்கம் செய்துகொண்டமையும் அக்காலத்தில் உலக சந்தையில் ஏற்பட்ட அரிசிப் பற்றுக்குறையும் இவ்விலையுயர்வுக்குக் காரணமாகும். 1967 ஆம் ஆண்டு நவம்பரில் உத்தரவாதவிலையினை 14 ரூபாவாக உயர்த்துவதற்கும் இதுவே முக்கிய காரணமாகும். 1974 ஆம் ஆண்டில் உலக சந்தையில் ஏற்பட்ட தானியப் பற்றுக்குறை காரணமாக அரிசியின் விலை உயர்ந்தது. இவ்வாண்டிலும் உத்தரவாதவிலை 33 ரூபாவாக உயர்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. 1978 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஒரு புசல் இறக்குமதி செய்யப்பட்ட நெல்லின் விலை உத்தரவாதவிலையை விடக் கூடியதாக இருந்தது. உலக சந்தையில் ஏற்பட்ட அரிசி நிரம்பலின் வீழ்ச்சியினால் ஏற்பட்ட விலை உயர்வு, இலங்கை ரூபாவின் வெளிநாட்டுப் பெறுமதி தொடர்ந்து குறைந்துசென்றமை என்பன இவ்விலை உயர்வுக்கு முக்கிய காரணங்களாகும். எனவே சுருக்கமாக நோக்குமிடத்து 1977 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலங்களில் ஓரிரு ஆண்டுகளைத் தவிர உத்தரவாத விலை, இறக்குமதி விலையைவிட உயர்வாக இருந்துள்ளது. சில காலங்களில் உத்தரவாதவிலை இறக்குமதி விலையினைவிட ஏறக்குறைய இருமடங்கு அதிகமாக இருந்துள்ளது. உதாரணமாக 1961 ஆம் ஆண்டில் ஒரு புசல் நெல்லின் உத்தரவாதவிலை 12 ரூபாவாக இருக்கையில் இறக்குமதி செய்யப்பட்ட நெல்லின் விலையானது 6 ரூபா 43 சதங்களாக இருந்துள்ளது. பிற்காலங்களில் உத்தரவாதவிலையைவிட இறக்குமதிவிலை உயர்வாக இருப்பினும் உள்ளூரில் திறந்த சந்தைவிலையானது விவசாயிகளுக்கு ஊக்கமளிப்பதாக இருந்துள்ளது.

உற்பத்தியாளரைப் பொறுத்து, கிடைக்கக்கூடிய சிறந்த மாற்றுவிலையாக இறக்குமதி செய்யப்பட்ட நெல்லின் விலையைக் கருதக்கூடியதாக இருப்பதால் இறக்குமதி விலையிலும்பார்க்க மேலதிகமாக உள்ள உத்தரவாத விலையின் அளவினை நெல்லின் உற்பத்தியினை அதிகரிக்கும் நோக்குடன் உற்பத்தியாளருக்கு வழங்கப்பட்ட மானியமாகக் கொள்ளலாம்.[24] ஒரு குறிப்பிட்ட பொருளின் உற்பத்தியில் சாதனங்களைப் பயன்படுத்துவதைத் தூண்டுவதற்கோ அல்லது குறிப்பிட்ட பொருள் உற்பத்தி செய்யப்படும் முறைகளில் மாற்றங்களை ஏற்படுத்தலைத் தூண்டுவதற்கோ குறைவிருத்தி நாடுகளில் அடிக்கடி உற்பத்தி மானியங்கள் வழங்கப்படுகின்றன.[25] இலங்கையில் இவ்விரு வகை நோக்கத்தின் அடிப்படையிலும் உற்பத்தியாளர் மானியங்கள் வழங்கப்படுகின்றன. இலங்கை அரசாங்கத்தினால் நெல் உற்பத்தியாளர்களுக்குப் பல்வேறு வகையான உற்பத்தி மானியங்கள் வழங்கப்பட்டமைக்குக் காரணம் நெல் உற்பத்தித் துறையின் அபிவிருத்திமூலம் நாட்டின் பொருளாதாரத்தில் அமைப்பு ரீதியான மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும் என்ற நோக்கத்தினாலாகும். இவ்வகையில் இறக்குமதி விலைக்கும் உத்தரவாதவிலைக்கும் இடையேயான வித்தியாசமும் ஒருவகை உற்பத்தியாளர் மானியமாக அமைகின்றது. இறக்குமதி விலை உத்தரவாதவிலையை விட உயர்வாக இருக்கின்றபோது இவ்வகையான உற்பத்தியாளர் மானியம் ஏற்படுவதில்லை என்பது கவனத்திற்குரியது. பின்வரும் அட்டவணை நெல் உற்பத்திக்கு உத்தரவாதவிலைத் திட்டத்தின்கீழ் அரசாங்கம் வழங்கிய மானியத்தின் அளவினைக் காட்டுகின்றது.

### அட்டவணை 5

**உத்தரவாதவிலைத் திட்டத்தின்கீழ் நெல்லுக்கான உற்பத்தி மானியத்தின் அளவு 1955/56 - 1977 (மில்லியன் ரூபா)**

| ஆண்டு | மானியத் தொகை | ஆண்டு | மானியத் தொகை |
|---|---|---|---|
| *1955/56* | *78.0* | *1966/67* | *76.4* |
| *1956/57* | *61.0* | *1967/68* | *36.5* |
| *1957/58* | *93.0* | *1968/69* | *51.3* |
| *1958/59* | *108.6* | *1969/70* | *177.5* |
| *1959/60* | *133.9* | *1970/71* | *259.0* |
| *1960/61* | *156.6* | *1972* | *230.0* |
| *1961/62* | *169.9* | *1973* | *184.5* |
| *1962/63* | *175.1* | *1974* | — |
| *1963/64* | *172.9* | *1975* | *63.5* |
| *1964/65* | *162.0* | *1976* | *123.9* |
| *1965/66* | *157.5* | *1977* | *253 6* |

மூலம் : நெல் சந்தைப்படுத்தும் சபை
உணவு ஆணையாளர்

மானியம் வழங்குதல் அரசாங்கத்திற்குச் செலவை ஏற்படுத்துகின்ற விடயம் ஆகும். 1955 ஆம் ஆண்டுக்கும் 1979 ஆம் ஆண்டுக்கும் இடையில் உத்தரவாதவிலைத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட நெல்லுக்கான மானியத்தின் அளவில் 1970/71 இல் வழங்கப்பட்ட தொகையே (259 மில்லியன் ரூபாய்கள்) உயர்ந்த தொகையாகவும் 1967/68 இல் வழங்கப்பட்ட தொகை குறைந்த தொகையாகவும் உள்ளது. எனினும் பெரும்பாலான காலங்களில் இங்கே குறிப்பிடப்படும் மானியத் தொகை அரசாங்கத்தின் வருமானத்தில் குறிப்பிடத் தக்க அளவு பங்கினைப் பெறுகின்றது. உதாரணமாக 1965 ஆம் 1970/71 ஆம் ஆண்டுகளில் இங்கே குறிப்பிடப்படும் மானியத் தொகை அரசாங்க வருமானத்தில் முறையே 10 வீதம், 9 வீதம் ஆக இருந்துள்ளன. காலப்போக்கில் இம்மானியத் தொகையின் அளவு குறையும் எனக் கருதலாம்.

அண்மைக் காலத்தில் இலங்கை நெல்லில் சுய தேவையினைப் பூர்த்தி செய்யும் நிலையை எய்திக்கொண்டிருப்பதால், நெல்லை இறக்குமதி செய்ய வேண்டிய தேவை இல்லாமல் போகலாம். இந்நிலையில் நெல் உற்பத்தியாளர்களுக்கு மானியம் வழங்குவதை இறக்குமதி செய்யப்படும் விலை அடிப்படையில் கணக்கிட முடியாது. எதிர்காலத்தில் இலங்கை, நெல்லை உற்பத்தி செய்யாத நிலையில் உள்நாட்டு திறந்த சந்தைவிலையானது உத்தரவாத விலையினைவிடக் கூடுதலாக இருக்கும்பட்சத்தில் உத்தரவாதவிலை மூலமான உற்பத்தியாளர் மானியத்தினை அளவிட முடியும். அண்மைக் காலங்களில் திறந்த சந்தைவிலையானது உத்தரவாதவிலையைவிடக் கூடுதலாக இருப்பது கவனிக்கத் தக்கது.

## நெல் உற்பத்தி அதிகரிப்பு

உத்தரவாதவிலைத் திட்டத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்று, நெல் உற்பத்தியில் அதிகரிப்பினை ஏற்படுத்துவதும், நீண்ட காலத்தில் தன்னிறைவைப் பெறுவதுமாகும். உத்தரவாதவிலைத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் தூண்டுதல்கள், மேலதிகமாக நிலப்பரப்பைப் பயிர்ச்செய்கையின்கீழ்க் கொண்டுவருவதன் மூலமும் ஏக்கருக்குரிய விளைச்சலை அதிகரிப்பதன்மூலமும் உற்பத்தி அதிகரிப்புக்குப் பங்காற்ற முடியும்.[26] உத்தரவாதவிலைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டபின் அதிகளவு பரப்பை நெற்செய்கையின்கீழ்க் கொண்டு வந்ததன் மூலமும், ஏக்கருக்குரிய விளைச்சலை அதிகரித்ததன் மூலமும் நெல் உற்பத்தியானது அதிகரிக்கப்பட்டுள்ளது. 1950 ஆம் ஆண்டில் நெற்பயிர் செய்கைபண்ணப்பட்டுள்ள நிலப்பரப்பு, நெல்லின் உற்பத்தி, ஏக்கருக்குரிய விளைச்சல் என்பன முறையே 1066,000 ஏக்கர், 22.0 மில்லியன் புசல், 20.6 புசல் என இருக்க, 1983 ஆம் ஆண்டில் இவை முறையே 2036,000 ஏக்கர், 118.6 மில்லியன் புசல், 70 புசல் என எல்லா வகையிலும் பெருமளவு அதிகரிப்பைக் காணக்கூடியதாக இருந்தது. இந்நிலையில் நெல் உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பு முழுவதற்கும் உத்தரவாதவிலைத் திட்டம்தான் காரணம் எனக் கூற முடியுமா? முடியாது. ஏனென்றால் நெல் உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பானது குடியேற்றத் திட்டங்கள் நிலச் சீர்திருத்தச் சட்டங்கள், உரப் பாவனை, உயர்ரக விதைப்பாவனை,

களை பிடுங்கலிலும், நாற்று நடுதலிலும், கிருமிநாசினி பாவனையிலும் ஏற்பட்ட முன்னேற்றங்கள் போன்றனவற்றின் ஒன்றுசேர்ந்த விளைவின் காரணமாக ஏற்பட்டது. எனவே உத்தரவாதவிலைத் திட்டமானது, நெல் உற்பத்தி அதிகரிப்புக்கு எவ்வளவு தூரம் உதவி செய்துள்ளது என்பதைத் துல்லியமாகக் கணிப்பிட்டுவிட முடியாது. நெல் உற்பத்தி அதிகரிப்பில் உத்தரவாதவிலைத் திட்டத்தின் பங்கினை மதிப்பிடுதல் கடினமாக இருப்பினும் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டபின் குறிப்பிடத்தக்க அளவுக்கு நெல் உற்பத்தியில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பதையும், விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களுக்கான விலையினை ஸ்திரப்படுத்துவதன் மூலம் சிறு விவசாயிகளின் வாழ்க்கைத்தர உயர்வுக்குப் பெருமளவு உதவி செய்துள்ளது என்பதையும் கூறிக்கொள்ள முடியும்.[27]

## உத்தரவாத விலையும் நெற் கொள்வனவும் :

உத்தரவாதவிலைத் திட்டம் விவசாயிகளுக்கு நன்மையளித்துள்ளதா என்பதை அறிவதற்கு உள்நாட்டு நெல் உற்பத்தியில் அரசாங்கம் எவ்வளவு பங்கினைக் கொள்வனவு செய்துள்ளது என்பதையும் அறிந்துகொள்ளுதல் வேண்டும். ஆரம்பத்தில் கூட்டுறவு விவசாய உற்பத்தி விற்பனைச் சங்கங்களே நெல் கொள்வனவிற்குப் பொறுப்பாக இருந்தன. 1954 ஆம் ஆண்டில் நாடெங்கிலும் பரந்துள்ள 600 கூட்டுறவு விவசாய உற்பத்தி விற்பனைச் சங்கங்கள் மூலம் அரசாங்கம் நெல்லைக் கொள்வனவு செய்தது. இத்திட்டத்தினை அமுலாக்கும் பொறுப்பு 1958 ஆம் ஆண்டில் விவசாய சேவை இலாகாவிடம் ஒப்படைக்கப்பட்டது. 1971 ஆம் ஆண்டில் இருந்து நெற்சந்தைப்படுத்தும் சபையே உத்தரவாதவிலைத் திட்டத்தின்கீழ் நெல் கொள்வனவுக்குப் பொறுப்பாக இருந்துவருகின்றது. இச்சபையும் கிராமிய மட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களைப் பயன்படுத்தியே நெல் கொள்வனவை மேற்கொண்டு வருகின்றது. நெல் சந்தைப்படுத்தும் சபை நெல் கொள்வனவை அதிகரிப்பதற்காக முக்கியமான நடவடிக்கைகளை மேற்கொண்டாலும்கூட தனியாரின் செல்வாக்கே அதிகமாக இருந்துள்ளது: உதாரணமாக 1974 ஆம் ஆண்டில் அவசரகால சில ஒழுங்கு விதிகளின் படி சிறப்புக் காரணங்கள் தவிர்ந்த அனுமதிச் சான்றிதழ் இன்றி நெல் அல்லது அரிசி எவ்வகையாலும் கொண்டுசெல்லப்படுவது அரசாங்கத்தினால் தடைசெய்யப்பட்டது. இது அக்காலத்தில் நெல் கொள்வனவில் நெல் சந்தைப்படுத்தும் சபைக்குத் தனியுரிமை நிலையை வழங்கியது: எனினும் நெல் கொள்வனவில் முன்னேற்றம் காணப்படவில்லை. இத்தனியுரிமை நிலை 1975 ஆம் ஆண்டு ஒக்டோபரில் நீக்கப்பட்டது. 1981 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் நெல்சந்தைப்படுத்தும் சபை கேள்விப்பத்திர முறையை அறிமுகப்படுத்துவதன் மூலம் நெல்லைத் தனியார் மூலகங்களில் இருந்து கவர்ந்து தனது கொள்வனவை அதிகரிக்க முயற்சி செய்தது. தனியாருடன் போட்டியிட்டு நெல் கொள்வனவு செய்வதற்காக நெல் சந்தைப்படுத்தும் சபை உத்தரவாத விலையிலும் பார்க்கக் கூடிய விலையினை வழங்கலாம் என்ற அதிகாரமும் அளிக்கப்பட்டது. எவ்வகையில் முயன்றாலும் நெல் கொள்வனவு விடயத்தில் நெல் சந்தைப்படுத்தும் சபை வெற்றி பெறவில்லை என்றே கூறவேண்டும்.

பின்வரும் அட்டவணையானது உத்தரவாதவிலைத் திட்டத்தின்கீழ் அரசாங்கத் துறையின் நெல் கொள்வனவு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாகக் காட்டப்பட்டுள்ளது. (பின்னிணைப்பு இரண்டில் மொத்தமாக உத்தரவாதவிலைத் திட்டத்தின்கீழ்க் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் அளவு காட்டப்பட்டுள்ளது.)

## அட்டவணை 6

### உத்தரவாத விலைத் திட்டத்தின்கீழ் நெல் கொள்வனவு (1948 — 1983)

(மொத்த உள்நாட்டு நெல் உற்பத்தியின் சதவீதமாக)

| ஆண்டு | கொள்வனவு (வீதத்தில்) | ஆண்டு | கொள்வனவு (வீதத்தில்) | ஆண்டு | கொள்வனவு (வீதத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1948 | 0.25 | 1960 | 48.4 | 1972 | 41.9 |
| 1949 | 0.22 | 1961 | 51.9 | 1973 | 36.4 |
| 1950 | 0.19 | 1962 | 56.2 | 1974 | 27.2 |
| 1951 | 0.24 | 1963 | 56.4 | 1975 | 20.5 |
| 1952 | 0.46 | 1964 | 57.8 | 1976 | 21.4 |
| 1953 | 0.15 | 1965 | 59.6 | 1977 | 30.5 |
| 1954 | 11.6 | 1966 | 56.8 | 1978 | 35.7 |
| 1955 | 37.6 | 1967 | 24.4 | 1979 | 28.2 |
| 1956 | 35.4 | 1968 | 23.4 | 1980 | 9.9 |
| 1957 | 42.4 | 1969 | 21.1 | 1981 | 6.0 |
| 1958 | 44.4 | 1970 | 34.2 | 1982 | 3.9 |
| 1959 | 45.7 | 1971 | 48.2 | 1983 | 13.1 |

மூலம்: நெல் சந்தைப்படுத்தும் சபை
குடிமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

அட்டவணையினை நோக்கும்போது அரசாங்கத்தின் நெல் கொள்வனவினை இரு காலகட்டங்களாகப் பிரித்து ஆராயலாம்.

1. 1948 ஆம் ஆண்டிற்கும் 1966 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலப் பகுதி

2. 1966 ஆம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலப் பகுதி
முதலாவது காலப்பகுதியினை மேலும் இருபிரிவுகளாகப் பிரிந்து ஆராயலாம்.

(அ) 1948 க்கும் 1953 க்கும் இடைப்பட்ட காலப் பகுதி. இக்காலப்பகுதியில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட நெல்லில் ஒருவீதத்திற்கும் குறைவான நெல்லே உத்தரவாதவிலைத் திட்டத்தின்கீழ்க் கொள்வனவு செய்யப்பட்டது.

(ஆ) 1954 ஆம் ஆண்டு தொடக்கம் 1966 ஆம் ஆண்டு வரையுள்ள காலப் பகுதி. இக்காலப் பகுதியில் ஓரிரு ஆண்டுகளைத் தவிர ஏனைய ஆண்டுகளில் உத்தரவாதவிலைத் திட்டத்தின்கீழ்க் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் அளவு வீதாசாரத்தில் தொடர்ந்து அதிகரித்துச் சென்றுள்ளது. எவ்வினும் மொத்த நெல் உற்பத்தியில் எந்த ஆண்டிலாவது 60 வீதத்திற்கு மேல் கொள்வனவு செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. முதலாவது பெரும் காலப் பகுதியில் திறந்த சந்தை விலையைவிட உத்தரவாத விலையானது உயர்வாக இருந்தமை இங்கு கவனத்தில் கொள்ளவேண்டிய முக்கிய அம்சமாகும். இதுவே இக்காலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட நெல்லில் அரசாங்கம் பெருமளவு கொள்வனவு செய்வதற்குக் காரணமாக இருந்தது. ஏனெனில் திறந்த சந்தைவிலையினைவிட உத்தரவாதவிலை அதிகமாக இருக்கின்றபோது விவசாயிகள் அரசாங்கத்திற்கே நெல்லை விற்பனை செய்ய முன்வருவர். ஆனால் பின்னர் கூறப்படும் பல காரணங்களால் (இக்காரணிகள் இரண்டாவது பெரும் காலப் பகுதிக்கும் பொருந்துவன.) விவசாயிகள் தமது உற்பத்தியில் கணிசமான அளவினை அரசாங்கத்திற்கு விற்பனை செய்யவில்லை. உத்தரவாதவிலைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தும்போது இருந்த குறைகளின் காரணமாக விவசாயிகள் உத்தரவாதவிலைத் திட்டத்தின் முழு நன்மையினையும் பெற்றிருப்பார்கள் எனக் கூறுவதற்கில்லை.

முதலாவது பெரும் காலப் பகுதியில் திறந்த சந்தையில் பெறக்கூடிய விலையிலும் பார்க்க உத்தரவாத விலை உயர்வாக இருந்தபோது, விவசாயிகள் தமது உற்பத்தியில் தமது தேவைக்கு மேலான பகுதியை அரசாங்கத்திற்கு விற்பனை செய்திருப்பார்களாயின் நன்மையினைப் பெற்றிருப்பார்கள். ஆனால் இக்காலத்தில் உள்ளூர் வர்த்தகர்கள் இத்தீவின் பல பாகங்களிலும் உள்ள நெல் உற்பத்தியாளர்களிடமிருந்து உத்தரவாத விலையிலும் பார்க்க மிகக் குறைந்த விலையில் கொள்வனவு செய்து, அவற்றை உத்தரவாதவிலைத் திட்டக் களஞ்சியங்களுக்கோ, அல்லது கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கங்களுக்கோ வழங்கியதன் காரணமாக அரசாங்கத்தினால் ஏற்கப்பட்ட செலவானது உற்பத்தியாளர்களுக்கு முழு நன்மையினையும் அளிக்கவில்லை என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.[28] எனினும் 1966 ஆம் ஆண்டுக்குப் பின்னர் உள்ள காலத்திலும் பார்க்க நெல் கொள்வனவு என்ற அடிப்படையில் வைத்து நோக்கும்போது முதலாவது பெரும்காலப் பிரிவில் உத்தரவாதவிலைத் திட்டம் இரண்டாவது பெரும் காலப் பிரிவிலும் பார்க்க ஒப்பீட்டு ரீதியில் சிறப்பான முறையில் இயங்கி உள்ளது எனலாம்.

1966 ஆம் ஆண்டுக்குப் பிந்திய பெரும் காலப் பகுதியில் எந்த ஆண்டிலாவது உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட நெல்லில் 50 வீதத்திற்கு மேற்பட்ட பங்கு கொள்வனவு செய்யப்படவில்லை. இதற்கு முக்கிய காரணமாக அமைந்தது, இப்பெரும் காலப் பகுதியில் ஓரிரு ஆண்டுகள் தவிர ஏனைய ஆண்டுகளில் திறந்த சந்தை விலையானது உத்தரவாத விலையைவிட உயர்வாக இருந்தமையாகும். இது விவசாயிகள் தமது உற்பத்தியில் அரசாங்கத்திற்கு விற்பனை செய்யும் வீதாசாரம் குறைவதற்குக்

காரணமாயிற்று.[29] 1980 ஆம் ஆண்டுக்குப் பின்னர் உத்தரவாத விலைக்கும் வெளிச்சந்தை விலைக்கும் இடையேயான வேறுபாடு அதிகரித்தமை உத்தரவாத விலைத் திட்டத்தின்கீழ் கொள்வனவு செய்யப்படும் அளவு விதாசார ரீதியில் மிகவும் குறைவடையக் காரணமாயிற்று. பெரும்பாலான விவசாயிகள் வெளிச்சந்தை விலைக்கே தனியாரிடம் தமது நெல்லை விற்பனை செய்தனர்.

சுருங்கக்கூறின் நெல்லுக்கான உத்தரவாத விலையானது 1948 ஆம் ஆண்டுக்கும் 1966 ஆம் ஆண்டுக்கும் இடையில் உற்பத்தியாளருக்கு ஆதரவு தரும் விலையாக இருந்து 1967 ஆம் ஆண்டின் பின்னர் கீழ்மட்ட விலையாகவே தொழிற்பட்டுவந்துள்ளது. கீழ்மட்ட விலையாக உத்தரவாத விலை இயங்கியதை நாம் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. ஏனெனில் கீழ்மட்ட விலை இயக்குனராக நெற்சந்தைப்படுத்தும் சபை இருந்திருக்காவிடில் உற்பத்தியாளருக்குத் தங்கள் நெல்லினைச் சந்தைப்படுத்தும்போது பேரம் பேசும் சக்தி குறைவாக இருந்திருக்கலாம்.[30] தனியாருக்குத் தமது நெல்லைக் குறிப்பிட்ட விலைக்கு மேல் வழங்குவதற்கு உத்தரவாத விலைத் திட்டம் விவசாயிகளுக்கு உதவி செய்கிறது.

ஒரு பொருளின் சந்தைப்படுத்தலை நிர்ணயிப்பதில் விலை முக்கிய பங்கு பெறுகின்றபோதும், ஏனைய காரணிகளின் செல்வாக்கினையும் குறைத்து மதிப்பிடுவதற்கில்லை. உத்தரவாதவிலைத் திட்டத்தின்கீழ் அரசாங்கம் பெருமளவு நெல்லைக் கொள்வனவு செய்ய முடியாமல் இருந்தமைக்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன.

முதலாவதாக, கிராமத்தில் உள்ள விவசாயிகளின் பொருளாதார நிலையினையும் அவர்களின் மனோபாவத்தினையும் குறிப்பிடலாம். கிராமிய விவசாயிகள் பலர் வறிய நிலையில் உள்ளனர். இவர்கள் தமதூரில் உள்ள பணம் படைத்த விவசாயிகள், கடைக்காரர்கள், தரகர்கள் ஆகியோரிடம் கடன்பட்டுள்ளனர். இலங்கையில் கிராமியக் கொடுகடன்பற்றிச் செய்யப்பட்ட ஆய்வுகளும் நிறுவன ரீதியற்ற மூலங்களே கிராமியப் படுகடனில் பெரும்பங்கு பெறுகின்றன என்பதை வெளிப்படுத்தி உள்ளன. கடன் பட்டதன் காரணமாக விவசாயிகள் தமது உற்பத்தியைத் தமது கடன் கொடுத்தவர்களுக்கே விற்கவேண்டிய கடமைப்பாடும் ஏற்படுகின்றது. இல்லையாயின் அடுத்த போகத்திற்குக் கடன்பெற முடியாமல் போய்விடும். மேலும் சில சமயங்களில் எதிர்காலத்தில் நடைபெறப்போகும் நெல் கொள்வனவிற்காகப் பயிர்ச்செய்கை நடைபெற்றுக்கொண்டு இருக்கும் போதே முற்பணத்தினை விவசாயிகள் வசதிபடைத்தவர்களிடமிருந்து பெற்றுவிடுகின்றனர். இதன் காரணமாகக் கடன் கொடுத்தவர்களுக்கே நெல் விற்பனை செய்யப்படுகின்றது. ஒருபக்கம் அதிக வட்டி வழங்குவதன் மூலமும், மறுபக்கம் தனது விளைபொருளுக்குக் குறைந்த விலை பெறுவதன் மூலமும் விவசாயி பெருமளவுக்குச் சுரண்டப்படுகின்முன்.

கூட்டுறவுச் சங்கங்களே கிராமங்களில் நெல் கொள்வனவைச் செய்யும் நிலையங்களாக விளங்கிவருகின்றன. கூட்டுறவுச் சங்கங்களுக்கு விவசாயி நெல்லினை வழங்குகின்றபோது உடனடியாகப் பணத்தினைப் பெற்

றுக்கொள்ள முடியாது. ஒரு கிழமையோ அல்லது இரண்டு கிழமையோ சென்ற பின்னரே பணம் கிடைக்கும். இதனாலும் விவசாயிகள் நெல்லை அரசாங்கத்திற்கு விற்பனை செல்வதில் தயக்கம் காட்டுகின்றனர். ஏனெனில் விவசாயிகள் உடன் பணம் பெறுவதில் அக்கறையும், ஆர்வமும், அவசியமும் உடையவர்கள். கூடுதலான விலைக்கு விற்று, காலம் கழித்து, பணம் பெறுவதிலும்பார்க்க ஓரளவு குறைந்த விலையென்றாலும் உடனடியாகப் பணம் பெறுவதை விரும்புவார்கள். இதனால்தான் முதலாவது பெரும் காலப் பகுதியில் விவசாயிகள் தமது உற்பத்தியில் கணிசமான பகுதியைக் குறைந்த விலைக்கென்றாலும் தனியாரிடம் கையளித்தனர். ஏனெனில் தனியாரிடம் விற்பனை செய்யும்போது உடன் பணம் பெறலாம். ஆரம்ப காலங்களில் கூட்டுறவுச் சங்கங்களிடம் பணம் போதியளவு இல்லாமல் இருந்தமையும் நெல் கொள்வனவினைக் கட்டுப்படுத்தியது. பிற்காலத்தில் உத்தரவாத விலையைவிடத் திறந்த சந்தைவிலை உயர்வாக இருந்தமையும் அது பணமாக உடனடியாக விவசாயிகளுக்குக் கிடைத்தமையும் அரசாங்கத்தின் கொள்வனவை வெகுவாகப் பாதித்த விடயமாகும்.

கூட்டுறவுச் சங்க நிருவாகத்தில் உள்ள குறைபாடுகள், மோசடிகள் போன்றவற்றினாலும் அரசாங்கத்தின் நெல் கொள்வனவு குறைவாக அமைந்தது. விவசாயி கூட்டுறவுச் சங்கத்திற்கு நெல்லைக் கொண்டுசென்று விற்க முனைகின்றபோது சங்க அலுவலர்கள் நெல்லினைத் தரம் குறைந்த நெல் என்று கூறின் விவசாயி அதனைத் திரும்பவும் வீட்டுக்கே கொண்டு செல்லவேண்டி இருக்கும். இது விவசாயிக்கு இருவகையிலும் போக்குவரத்துச் செலவினை ஏற்படுத்துகின்றது. ஆனால் தனியார் நெல்லைக் கொள்வனவு செய்ய முன்வரும்போது அவர்கள் நெல்லின் தரம்பற்றி அதிகம் அலட்டிக்கொள்வதில்லை. மேலும் கூட்டுறவுச் சங்கங்களில் பிழையான அளவு முறைகள் மூலம் விவசாயிகளை ஏமாற்றும் நடவடிக்கைகளும் இடம்பெறுவதுண்டு. கிராமத்தில் உள்ள படித்தவர்கள் அல்லது அதிகார வர்க்கத்தினரே கூட்டுறவுச் சங்கங்கள் பலவற்றை இயக்குகின்றனர். இவர்கள் விவசாயியின் நலன்களில் அதிகம் அக்கறை காட்டுவதில்லை. இதனால் விவசாயிகள் சங்கங்களுக்குத் தமது நெல்லைக் கொண்டு சென்று விற்பனை செய்யாமல் தனியாருக்கே விற்றுவிடுகின்றனர். மேலும் தனியார் வியாபாரிகள் நெல் கொள்வனவிற்குச் செல்லாத கிராமங்களில் பல விவசாயிகள் தமது நெல்லைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கே விற்பனை செய்தும், உத்தரவாத விலையிலும் பார்க்கக் குறைந்த விலை பெற்ற சம்பவங்கள் காணப்படுவதைப் பல வெளிக்கள ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

அரசாங்கத்தின் சார்பில் நெல் கொள்வனவை மேற்கொள்ளும்போது அண்மைக் காலம்வரை எதிர்நோக்கப்பட்ட இன்னொரு முக்கிய தடையாதெனில் களஞ்சிய வசதிப் பற்றுக்குறையாகும். ஆரம்பத்தில் இது பெரும் குறைபாடாகக் காணப்பட்டது. விவசாயி தனது உற்பத்தியை அரசாங்கப் பண்டகசாலைகள் உள்ள இடத்திற்கு எடுத்துச்சென்றாலும், கூட்டுறவுச் சங்கம் போதிய நிதி வைத்திருந்தபோதும், பல சந்தர்ப்பங்களில் உற்பத்தியைக் கொள்வனவு செய்ய முடியாமல் போனதற்குக் காரணம் போதிய களஞ்சிய வசதி இன்மையாகும்.[31] ஆனால் 1980 ஆம்

ஆண்டின் பின்னர் இதனை ஒரு காரணமாக ஏற்றுக்கொள்ள முடியாது. இதனைப் பின்வரும் அட்டவணையில் இருந்து தெளிவாகப் புரிந்துகொள்ளலாம்.

## அட்டவணை 7

### நெல் சந்தைப்படுத்தும் சபையின் களஞ்சியங்கள், களஞ்சியங்களின் இயலளவு உத்தரவாதவிலைத் திட்டத்தின்கீழ் கொள்வனவு செய்த அளவு

| ஆண்டு | நெல் சந்தைப்படுத்தும் நிலையங்கள் | களஞ்சியங்களின் கொள்ளளவு (000 மெற். தொன்) | உத்தரவாத வி. திட். கீழ் கொள்வனவு (000 மெற். தொன்) |
|---|---|---|---|
| *1972* | 281 | 263 | 549 |
| *1973* | 281 | 263 | 478 |
| *1974* | 281 | 263 | 436 |
| *1975* | 281 | 263 | 242 |
| *1976* | 290 | 299 | 269 |
| *1977* | 292 | 321 | 512 |
| *1978* | 308 | 344 | 675 |
| *1979* | 304 | 343 | 541 |
| *1980* | 373 | 427 | 211 |
| *1981* | 375 | 423 | 127 |

மூலம்: *நெல் சந்தைப்படுத்தும் சபை*
*உணவு ஆணையாளர்*

*1975 ஆம் 1976 ஆம் ஆண்டுகளிலும் நெற்சந்தைப்படுத்தும் சபையின் களஞ்சிய இயலளவிலும் பார்க்கக் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் அளவு குறைவாக இருப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. ஆனல் 1980 ஆம் ஆண்டின் பின்னர் நெற்சந்தைப்படுத்தும் சபையின் கொள்வனவு மிகவும் குறைவடைந்ததால் பல களஞ்சியங்களில் வெற்றிடம் கூடுதலாகக் காணப்பட்டது. உதாரணமாக 1980 ஆம் 1981 ஆம் ஆண்டுகளில் நெல் சந்தைப்படுத்தும் களஞ்சிய வசதி முறையே 427,000 மெற்றிக் தொன், 423,000 மெற்றிக் தொன் நெல்லைக் கொள்வனவு செய்யக்கூடியதாக இருக்கையில் உண்மையில் கொள்வனவு செய்யப்பட்ட நெல் 211,000 மெற்றிக் தொன், 127,000 மெற்றிக் தொன் ஆகக் காணப்பட்டன. 1982 ஆம் ஆண்டு நெற்சந்தைப்படுத்தும் சபையிடமிருந்த களஞ்சிய இயலளவில் ஏறக்குறைய 4/5 பகுதி பயன்படுத்தப்படவில்லை. களஞ்சிய இயலளவு முழுமையாகப் பயன்படுத்தப்படாமல் இருப்பது சமுதாய ரீதியில் ஓர் இழப்பேயாகும்.*

*போதிய போக்குவரத்து வசதியின்மையும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நெல்லை விவசாயிகள் விற்பனை செய்யாமைக்குக் காரணமாக அமைகின்றது. உத்தரவாதவிலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது இக்காரணி*

யின் செல்வாக்கு அதிகமாகக் காணப்பட்டது. வாகனப் போக்குவரத்திற்கேற்ற பாதைகள் இன்மையால் விவசாயி தனது உற்பத்தியினைத் தனது முதுகின்மேல் ஒற்றையடிப் பாதைகள் வழியே மலைகள், பள்ளத்தாக்குகள் போன்றவற்றின் மேலாகச் சுமக்கவேண்டி இருந்தது.[32] மூன்று தசாப்தங்கள் கடந்த பின்னரும் இலங்கையின் போக்குவரத்தில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டிருப்பினும், தற்போதும் போக்குவரத்து வசதி திறமையாக இன்மையால் நெல் கொள்வனவு தடைப்படுகின்றது. கொள்வனவு நிலையங்களில் இருந்து களஞ்சியங்களுக்கும் ஆலைகளுக்கும் நெல்லை எடுத்துச் செல்வதில் போதிய போக்குவரத்தின்மையே முக்கியமானதொரு சிக்கலாக விளங்குகின்றது.[33] ஆனால் தனிப்பட்டவர்கள் விவசாயிகளின் வீடுகளுக்குச் சென்று கொள்வனவு செய்வதால் அவர்களுக்கே தமது உற்பத்தியை விவசாயிகள் விற்றுவிடுகின்றனர். இதனால் போக்குவரத்து மூலம் ஏற்படக்கூடிய செலவும் இல்லாமல்போகின்றது.

நெற்சந்தைப்படுத்தும் சபையின் நெல் குற்றும் இயலளவு போதாமல் இருந்தமையும் இச்சபையின் நெல் கொள்வனவு ஆற்றலைப் பாதித்தது. 1975 ஆம் ஆண்டில் சபையினது நெல் குற்றும் இயலளவு மாதத்திற்கு 21 மெற்றிக் தொன்னாகும். அத்துடன் சில தனியாரும் நெல் சந்தைப்படுத்தும் சபையுடன் நெல் குற்றுவதற்குத் தம்மைப் பதிவுசெய்திருந்தனர். இரண்டினதும் ஒரு மாதத்திற்கான நெல் குற்றும் இயலளவினைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

## அட்டவணை 8

### ஒரு மாதத்திற்கான நெல் குற்றும் இயலளவு

| ஆண்டு | குற்றும் இயலளவு (000 மெற்றிக் தொன்) | ஆண்டு | குற்றும் இயலளவு (000 மெற்றிக் தொன்) |
|---|---|---|---|
| 1975 | 52 | 1979 | 72 |
| 1976 | 53 | 1980 | 66 |
| 1977 | 64 | 1981 | 83 |
| 1978 | 74 | 1982 | — |

மூலம் : நெல் சந்தைப்படுத்தும் சபை

நெல் குற்றும் வசதிகள் போதாமல் இருப்பதால் உணவு ஆணையாளருக்கு அரிசியை வழங்குவதில் தாமதம் ஏற்படுகின்றது. அத்துடன் குற்றுத நெல்லைப் பெருமளவு களஞ்சியங்களிலேயே தொடர்ந்து வைத்திருக்க வேண்டிய நிலை சபைக்கு ஏற்படுகின்றது. இதன் தொடர் விளைவாக ஏற்படுவது யாதெனில் பெருமளவு நெல்லை, சபை தொடர்ந்து கொள்வனவு செய்ய முடியாமல் இருப்பதேயாகும். ஆனால் விவசாயிகள் தமது அறுவடை முடிவடைந்தவுடன் உடனடியாகவே உற்பத்தியை விற்றுவிட விரும்புவதால் வீட்டுக்கு வரும் தனியாரிடம் நெல்லை விற்றுவிடுகிறார்கள். 1980 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நெல் சந்தைப்படுத்தும் சபையின் நெல் கொள்வனவு பெரிதும் குறைந்ததால் சபையின் குற்றும் இயலளவும் பெரும்பகுதி பயன்படுத்தப்படாமல் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பின்னிணைப்பு 1

### நெல்லின் உற்பத்திச் செலவு (புசல் ஒன்றுக்கு) (ரூபாவில்)

| மாவட்டம் | பெரும் போகம் 1966/67 | பெரும் போகம் 1978/79 | | பெரும் போகம் 1979/80 | | சிறு போகம் 1980 | | சிறு போகம் 1981 | | சிறுபோகம் 1982 | | பெரும் போகம் 1982/83 | | சிறு போகம் 1983 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | A | B | A | B | A | B | A | B | A | B | A | B | A | B |
| 1. அம்பாறை | 12·36 | | | | | | | | 37·96 | | 38.01 | 47·35 | 48·55 | | 47·30 |
| 2. அநுராதபுரம் | 8·12 | | 17·76 | | 24·21 | | 24·27 | | 35·45 | | 58·46 | 37·21 | 44·05 | | 46·03 |
| 3. பதுளை | 13·59 | | 32·41 | | | | 35·10 | | 36·01 | | 41·29 | | 43·93 | | 46·41 |
| 4. மட்டக்களப்பு | 10·89 | | | | | | | | 40·99 | | 51·55 | 54·43 | 41·69 | | 59·83 |
| 5. கொழும்பு | 23 96 | 24·33 | | | | 23·27 | | | | 60·34 | | 50·85 | | 73·74 | |
| 6. காலி | 11·89 | 22·04 | | 41·51 | | 26·51 | | 64·08 | | 58·57 | | 53·49 | | 60·16 | |
| 7. அம்பாந்தோட்டை | 8·21 | | 28·05 | | | | 28 60 | | 34·70 | | 35·16 | | 42·14 | | 52·72 |
| 8. யாழ்ப்பாணம் | 14·47 | 41·10 | | | | | | | | 35·24 | | | | | |
| 9 களுத்துறை | 13·01 | 31·98 | | 28·31 | | 25·92 | | 54·27 | | 57·96 | | 51·34 | | 65·75 | |
| 10. கண்டி | 16·81 | 19·50 | 19·01 | | | 21·43 | 21·20 | 64·00 | 33 91 | 64·87 | 31·34 | 58·03 | 59·36 | 51·58 | 45·61 |
| 11. கேகாலை | 17·06 | | | | | | | 36·28 | | 29·33 | | 34·69 | 37·61 | 36·89 | 36·12 |
| 12. குருநாகல் | 11·98 | 19·79 | 19·21 | | | 21·75 | 20·27 | 27·43 | 32·75 | 46·57 | 38·83 | 51·13 | 32·73 | 55·01 | 36·09 |
| 13. மன்னார் | 8·53 | | 33·97 | | 33·28 | | | | 53·62 | | | 59·30 | 38·93 | | |
| 14. மாத்தளை | 14·40 | 23·11 | 26 14 | | | | 32·62 | 53·19 | 39·94 | 65·20 | 34·20 | 37·75 | 37·64 | 51·08 | 42·89 |
| 15. மாத்தறை | 14·84 | 27·90 | 25·90 | | | 29·89 | | | | 65·18 | 51·67 | 57·89 | 48·46 | 66·90 | 59·87 |
| 16. மொனராகலை | 11·35 | | | | | | 31·03 | | 40·60 | | 35·35 | | 44·00 | | 43·94 |
| 17. நுவரெலியா | 18·43 | | 23·52 | | | | 27·42 | | 38·68 | | 40·76 | | 48·28 | | 58·02 |
| 18. பொலநறுவை | 9·84 | | 24·79 | | 21·16 | | 20·74 | | 34·07 | | 36·06 | | 40·15 | | 39·78 |
| 19. புத்தளம் | 14·05 | 28·82 | | | | | | | 34·19 | 53·41 | 50·17 | 40·35 | 34·92 | | 52 68 |
| 20. இரத்தினபுரி | 15·01 | 21·24 | | | | 24·06 | 15·51 | 56·12 | 41·89 | 49·33 | 42·32 | 58·84 | 47·26 | 74·73 | 43·88 |
| 21. திருகோணமலை | 9·69 | | | | | | | | 38·29 | | 38·57 | 51·29 | 48·65 | | 44·96 |
| 22. வவுனியா | 8·81 | | | | | | | 43·84 | 36·63 | | 44·82 | 49·99 | 43·34 | | 55·97 |
| 23. கம்பகா | | | | | | | | | 35·23 | 61·35 | 57·21 | 42·24 | 38·39 | | 56·31 |
| 24. முல்லைத்தீவு | | | | | | | | | 31·29 | | 39·27 | 59·14 | 47·03 | 57·77 | 49·98 |
| 25. கலாவீவ | | | | | | | | | 49·75 | | 40·69 | | | | 40·40 |
| 26. உடவளவை | | | | | | | | | | | | | | | 42·80 |
| யாழ்ப்பாணக் குடாநாடு | | | | | | | | | | | | 70·93 | | | |
| யாழ்ப்பாணம் தலைநிலம் | | | | | | | | | | | | 61·31 | 42·51 | | 46·69 |

A = மழைநீரை நம்பிப் பயிரிடப்படும் நிலங்கள் B = நீர்ப்பாசன வசதி செய்யப்பட்ட நிலங்கள்.

மூலம்: இலங்கை மத்திய வங்கி, விவசாயத் திணைக்களம், பேராதனை.

## பின்னிணைப்பு 2

## இலங்கையின் நெல் உற்பத்தி, உத்தரவாத விலைத் திட்டத்தின் கீழான கொள்வனவு, ஏக்கருக்குரிய விளைச்சல், அரிசி இறக்குமதி

| ஆண்டு | நெல் உற்பத்தி (மில்.புசல்கள்) | உத்தரவாத விலைத் திட்டத் தின் கீழ்க் கொள்வனவு (மில்.புசல்கள்) | ஏக்கருக்குரிய விளைச்சல் (புசல்கள்) | அரிசி இறக்குமதி (ஆயிரம் தொன்கள்) |
|---|---|---|---|---|
| 1952 | 28·9 | 1·3 | 30·8 | 386 |
| 1953 | 21·9 | 0·3 | 27·0 | 439 |
| 1954 | 31·1 | 3·6 | 30·0 | 407 |
| 1955 | 35·7 | 13·4 | 32·5 | 381 |
| 1956 | 26·9 | 8·7 | 30·1 | 471 |
| 1957 | 31·3 | 13·7 | 32·4 | 556 |
| 1958 | 36·6 | 13·2 | 34·8 | 580 |
| 1959 | 36.4 | 16·2 | 35·6 | 519 |
| 1960 | 43·0 | 20·8 | 36·4 | 532 |
| 1961 | 43·1 | 22·4 | 36·1 | 497 |
| 1962 | 48·0 | 27·0 | 37.9 | 515 |
| 1963 | 49·2 | 27·7 | 37·9 | 551 |
| 1964 | 50·5 | 29·7 | 38·7 | 547 |
| 1965 | 36·3 | 21·4 | 34·3 | 642 |
| 1966 | 45·7 | 28·0 | 35·6 | 494 |
| 1967 | 54·9 | 13·4 | 41·3 | 381 |
| 1968 | 64·5 | 14·9 | 46·5 | 344 |
| 1969 | 65·8 | 13·9 | 50,3 | 260 |
| 1970 | 77·5 | 26·2 | 51·3 | 526 |
| 1971 | 66·9 | 32·3 | 45·9 | 334 |
| 1972 | 62.9 | 26·4 | 46·9 | 262 |
| 1973 | 62·9 | 22·9 | 44·6 | 338 |
| 1974 | 76·8 | 20·9 | 45·9 | 297 |
| 1975 | 55·3 | 11·3 | 44·1 | 450 |
| 1976 | 60·0 | 12·8 | 44·9 | 419 |
| 1977 | 80·4 | 24·5 | 48·9 | 543 |
| 1978 | 90·6 | 32·4 | 50·7 | 169 |
| 1979 | 91·9 | 25·9 | 53·0 | 211 |
| 1980 | 102·2 | 10·1 | 56·0 | 189 |
| 1981 | 106·9 | 4·7 | 59·0 | 157 |
| 1982 | 103·3 | 4·0 | 63·1 | 161 |
| 1983 | 118·6 | 15·5 | 70·0 | 123 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி, உணவு ஆணையாளர், விவசாயத் திணைக்களம்.

மேலே கூறிய பல்வேறு காரணங்களால் நெல் சந்தைப்படுத்தும் சபை உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் நெல்லில் பெரும்பகுதியைக் கொள்வனவு செய்ய முடியாமல் போயிற்று. எனினும் நெல் சந்தைப்படுத்தும் சபை விவசாயிகளிடமிருந்து மிகக் கூடுதலான நெல்லைக் கொள்வனவு செய்யும் ஒரு கொள்வனவாளர் என்பதைவிட, கீழ்மட்ட விலைத் தொழிற்பாட்டாளராகவே கூடியளவுக்கு இயங்கவேண்டும் என எதிர்பார்க்கப்பட்டதால் இதன் கொள்வனவில் ஏற்பட்ட வீழ்ச்சி நெல் சந்தைப்படுத்தும் சபையின் ஆற்றலின்மையின் அடையாளமாகக் கருதக்கூடாது.[34]

## முடிவுரை :

உத்தரவாதவிலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் கணிசமான அளவுக்கு நிறைவேற்றப்பட்டுள்ளன என்றே கூறவேண்டும். ஆரம்ப காலங்களில் உள்நாட்டுத் திறந்த சந்தை விலை, இறக்குமதி விலை ஆகியவற்றிலும் பார்க்க உத்தரவாத விலை உயர்வாக இருந்து விவசாயிகளுக்கு ஊக்கமளித்து வந்துள்ளது. சில மாவட்டங்களில் உத்தரவாத விலையைவிட உற்பத்திச் செலவு கூடுதலாக உள்ளது. இதற்கான உண்மைக் காரணங்களை ஆராய்ந்து அதனைத் தீர்க்கும் வகையில் நடவடிக்கைகளை எடுப்பது அரசாங்கத்தின் கடமையாகும். பிற்காலத்தில் உத்தரவாத விலை கீழ்மட்ட விலையாகத் தொழிற்பட்டு வந்தாலும்கூட இதன் பங்கினைக் குறைத்து மதிப்பிடுவதற்கில்லை. ஏனெனில் உத்தரவாத விலை உற்பத்தியாளர்கள் தமது பொருட்களைச் சந்தைப்படுத்துவதில் பேரம் பேசுவதற்கு உறுதுணையாக உள்ளது. நெல் சந்தைப்படுத்துவதில் நெற்சந்தைப்படுத்தும் சபையின் பங்கு பிற்காலத்தில் குறைவாகக் காணப்பட்டுள்ளது. எனினும் உத்தரவாத விலையிலும்பார்க்கக் கூடிய விலை கிடைப்பது தனியார் சந்தையில் விவசாயிகளுக்கு ஊக்கம் அளிப்பதாக உள்ளது. வெளிச்சந்தையில் விலை கூடுதலாக அமைவதற்கு ஒரு வகையில் உத்தரவாதவிலை காரணமாக அமைகின்றது. மேலும் நீண்ட காலத்தில் உற்பத்தி அதிகரிப்பினும் விலை குறிப்பிட்ட மட்டத்திற்குக் கீழ் விழ்ச்சியடைய மாட்டாது என்ற நம்பிக்கையினையும் விவசாயிகளுக்கு உத்தரவாதவிலை கொடுத்துள்ளது. நெல்லில் தன்னிறைவை அடையும் சமயத்தில் இத்தகைய நம்பிக்கையினை உத்தரவாத விலை ஊட்டியமை வரவேற்கத்தக்க விடயமாகும்.

★ ✪ ★

## உசாவியவை


1. Bancil, P. C., **Ceylon Agriculture : A Perspective**, Dhanpat Rai and Sons, Delhi, 1977. P. 249.
2. Central Bank of Ceylon, **Survey on the Cost of Production of Paddy**, Colombo, 1969. P. 1.
3. Bancil, P. C., Cit., Op. P. 82.
4. Sittampalam, K., "The Guaranteed Price Scheme". **Proceedings of a Symposium on Research and Production of rice in Ceylon**. The Colombo Apothecaries Co. Ltd., Colombo 1966. P. 265.
5. Bancil, P. C., Op. Cit., P. 82.
6. Ibid P. 82.
7. Sittampalam, K , Op Cit., P. 266.
8. Gerald Peiris, "Peasant Agriculture", in K M. de Silva (ed) **Sri Lanka : A Survey**, London C. Hurst and Company, 1977, P. 245.
9. Sundaralingam, K., "Transport and Marketing in Sri Lanka with special reference to Agriculture" Ceylon Study Seminar, Peradeniya, 1974.
10. Uswatte - Arachchi., "The Guaranteed Price Scheme for Paddy - Subsidy to the Producer" **The Ceylon Economist**, Vol. 5 No. 2 Ceylon Economic Research Association, 1961. P. 142.
11. Bancil, P. C., Op. Cit., P. 84.
12. Hussain S. M., **Sectoral Analysis of Paddy Production, Marketing and Processing in Sri Lanka**, Research Paper No 6, Ministry of Planning and Economic Affairs, Developing Planning Unit, Colombo, 1977. P. 56.
13. Central Bank of Ceylon, **Economic Review 1979**, Colombo. P 31.
14. — — , **Survey on the cost of Production of Paddy**, Colombo, 1969. P. 1.
15. இலங்கை மத்திய வங்கி, இலங்கை முழுவதிலும் 1966 / 67 ஆம் ஆண்டு பெரும்போகத்திற்கான நெல்லின் உற்பத்திச் செலவு பற்றிய கணிப்பீட்டை மேற்கொண்டது. ஆனுல் கமநல ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனம் தெரிந்தெடுக்கப்பட்ட சில மாவட்டங்களில் மாத்திரமே நெல்லுச்கான உற்பத்திச் செலவுபற்றிய ஆய்வை மேற்கொண்டது.

பேராதனையில் உள்ள விவசாயத் திணைக்களம் தற்போது சகல மாவட்டங்களிலும் நெல் உற்பத்திக்கான செலவை அறிவதற்காக ஆய்வை நடாத்திவரினும் ஆரம்பத்தில் சில தெரிந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் மாத்திரமே ஆய்வை மேற்கொண்டது.

16. நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்துவதற்காகச் செய்யப்பட்ட முதலீட்டுச் செலவுகள் இங்கே கவனத்தில் கொள்ளப்படவில்லை. மேலும் நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்துவதற்காகச் செய்யப்பட்ட முதலீடுகளுக்கான சமூக செலவுகளும் இங்கு கவனத்தில் கொள்ளப்படவில்லை.

17. Hussian, S. M., Op. Cit., P. 58.

18. Marga Institute, **The Co - operative System and Rural Credit in Sri Lanka**, Colombo, 1974. P. 108.

19. Satchi Ponnampalam, **Dependent Capitalism in Crisis - The Sri Lanka Economy 1948 - 1980.** Zed Press, 57 Caledonian Road, London N 1 9 DN, 1981, P. 109.

20. Central Bank of Ceylon, **Economic Review 1981**, Colombo, 1961, P. 29.

21. Ibid, P. 29.

22. Karunatillake, H. N. S., "Income and Wealth Distribution Strategies in Sri Lanka" **Staff Studies** Vol. 6, No. 1 Central Bank of Ceylon, Colombo, 1976, P. 183.

23. Central Bank of Ceylon, **Economic Review 1981**, Colombo, P, 30.

24. Uswatte - Arachchi, Op. Cit., PP. 145 - 146.

25. Wickremasinghe, V. K., "The Production of Rice in Ceylon and the use of subsidies" **SEANZA LECTURES**, Central Bank of Ceylon, Colombo, 1968. P. 460.

26. Bancil, P. C., Op. Cit., P. 86.

27. Marga Institute, Op. Cit., P. 108.

28. Sittampalam, K., Op. Cit., 143.

29. United Nations Research Institute for Social Development, **Rice Revolution in Sri Lanka**, Geneva, 1977, P. 24.

30. Central Bank of Ceylon, **Economic Review 1981**. P. 30.

31. Sittampalam, K. Op. Cit., P. 143.

32. Ibid, P. 143.

33. Central Bank of Ceylon, **Economic Review 1977**, P. 22.

34. Central Bank of Ceylon, **Economic Review 1982**, P. 31.